மதுரைக்காண்டம்



கன்னடத்தில்: எச்.எஸ். சிவப்பிரகாசம்

தமிழில்: பாவண்ணன்

T
891.481 42
Sh 69 M

Sh69M

INDIAN INSTITUTE OF
ADVANCED STUDY
LIBRARY SIMLA

மதுரைக்காண்டம்

கன்னட மூலம்
எச். எஸ். சிவப்பிரகாஷ்

தமிழாக்கம்
பாவண்ணன்

காவ்யா

A TAMIL TRANSLATION OF
KANNADA PLAY
'MADHURAIKKAANDAM'
BY H. S. SHIVAPRAKASH

TRANSLATED FROM KANNADA BY
PAAVANNAN

FIRST EDITION : MAY 1993
© H. S. SHIVAPRAKASH

PUBLISHED BY
LAKSHMISUNDARAM
KAAVYA
16, 17th E Cross
Indhra nagar,
Bangalore-38.

PRINTED AT
THAMIZHOSAI ACHAGAM,
84, HABIBULLAH ROAD,
T. NAGAR, MADRAS-17.

Library IIAS, Shimla
T 891.481 42 Sh 69 M
00089984

PRICE : Rs. 12 only

சமர்ப்பணம்

மூத்த தாயாக இருந்து வழிகாட்டும்

திருமதி சரஸ்வதி ராம்னாத்

அவர்களுக்கு

மொழிபெயர்ப்பாளர் குறிப்பு

நானும், என் நண்பர் ஜி.கே. ராமசாமியும் மதுரைக் காண்டம் நாடகத்தை ரவீந்திர கலாக்ஷேத்திராவில் பார்த்தோம். பார்க்கப்போகும் முன்பு இது இத்தகைய நாடகம் என்பதெல்லாம் தெரியாது. தமிழ் தலைப்பில் கன்னட நாடகமா என்கிற வியப்பும், சிலப்பதிகாரக் கதைதானா அல்லது வேறு ஏதேனும் இருக்குமா என்கிற சந்தேகமும் மனசில் அலைமோதிக் கொண்டே இருந்தன. ஆயர்களை விடுத்து கல்லுடைக்கும் தொழிலாளிகளோடு தொடங்கிய மதுரைக் கண்டத்தின் முதற் காட்சி புதுசாக, வித்தியாசமாய்த் தோன்றியது. ஒரு மணி நேரம் நகர்ந்ததே தெரியவில்லை. முடித்து வரும்போது நம் கதையை வைத்துக் கொண்டு நாம் அணுகிப் பார்க்காத முறையில் அணுகி இருக்கிறாரே என்று சந்தோஷமாக இருந்தது. தமிழ்ச் சூழலில் இது அறிமுகப் படுத்தப்பட்டால் ஏதேனும் நல்லபடி தொடர்விளைவுகள் உருவாகுமா என்று நாங்கள் திரும்பத்திரும்பப் பேசிக் கொண்டிருந்தோம். தமிழ்க்கலாச்சாரம் இப்படிப் பட்ட மறு உருவாக்கங்களால் செழுமைப்படும் சாத்தியக் கூறுகளை அலசினோம். முதலில் எனக்குக் கொஞ்சம் தயக்கம்தான். ஆனால், தொடர்ந்து தன் உற்சாக வார்த்தைகளால் என் தயக்கத்தை அழித்து நம்பிக்கை கொடுத்தவர் ராமசாமிதான். மொழிபெயர்ப்புக்கு முழு மனசோடு சம்மதித்தார் நாடக ஆசிரியர் எச்.எஸ்.

சிவப்பிரகாஷ். அப்புறம் ஒரு முறை நாங்கள் மூவரும் ஓட்டலில் டீ குடித்தபடி கொஞ்ச நேரம் நாடகம் பற்றி விவாதித்தோம். அவர் முன்வைத்த கருத்துக்கள் எங்களை மிகவும் கவர்ந்தன. தமிழ்ப்பதிப்பிற்காக 'எழுக மதுரை' என்ற தலைப்பில் ஒரு விசேஷ முன்னுரையையும் மறுநாளே எழுதிக்கொடுத்தார். ஏதோ சுறுசுறுப்பில் எல்லா வேலைகளும் முடிந்தன. கன்னட மூலம் புத்தக வடிவம் பெறும் முன்பேயே தமிழ்மொழியாக்கம் புத்தக வடிவம் பெறுகிறது. என் மற்ற நூல்களை வெளியிடும் நண்பர் 'காவ்யா' சண்முகசுந்தரம் இதையும் வெளியிட ஒப்புக்கொண்டார். நூல் வடிவில் இந்நாடகம் வெளிவரும் இத்தருணத்தில் நாடக ஆசிரியர் எச்.எஸ். சிவப்பிரகாஷ், பதிப்பாசிரியர் 'காவ்யா' சண்முகசுந்தரம், நண்பர் ஜி.கே. ராமசாமி ஆகிய மூவர்க்கும் என் அன்பார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மிக்க அன்புடன்,
பாவண்ணன்

31.3.93
பெங்களூர்

எழுக மதுரை

1

என்னைப் பொறுத்தவரை மதுரை என்பது ஆழ்ந்த உறக்கத்திலிருக்கும் ஒரு நகரம். இளமைக்கால நினைவுகளில் ஆழ்ந்து கனவு காணவும் எனக்கு அது உதவுகிறது. சமீபத்தில் அங்கு சென்றிருந்தபோது நிஜமான மதுரையையும், என் நினைவுகளில் தங்கிப்போன பிம்பமான மதுரையையும் ஒப்பிட்டுப் பார்க்க முயற்சி செய்தேன், முடியவில்லை. ஒப்பிட முடியாததாகவே இரண்டும் தனித்தனியாகவே தோன்றின. இரண்டையும் இணைக்கிற ஒன்று உண்டென்றால், அது அந்நகரின் வெறும் பெயர் மட்டுமே-ம-து-ரை.

மௌனமாய் தன் துயரங்களை எல்லாம் ஏற்றுக் கொண்டு, நீதிக்காக மன்னனிடம் வாதாடி தன் சிலம்பை உடைத்து உண்மையை உணர்த்தி மதுரை நகரத்தையே தீக்கிரையாக்கின கண்ணகியின் கதையோடு என் ஆழ்ந்த நினைவுகள் பிணைந்து கிடக்கின்றன. அப்பழுக்கற்ற தன் பத்தினித்தன்மையாலேயே அவள் நகரத்தை எரித்தாள் என அப்போது எனக்குச் சொல்லப்பட்டது. என் அம்மாதான் எனக்கு இந்தக் கதையைச் சொன்னவள். அவளும் மதுரையைச் சேர்ந்தவள். ஒவ்வொரு

இரவிலும் தூங்கவைக்கும் பொருட்டு தொடர்ந்து எனக்கு இக்கதை சொல்லப்பட்டது. பிறகு என் சிறு வயதிலும் இளமையிலும் வேறு வேறு விதமான படிமங்கள், தாக்கங்கள், அனுபவங்கள் வந்து சேர்ந்தன.

சில ஆண்டுகளுக்கு முன்பு மீண்டும் மதுரைக்குச் சென்றிருந்தேன். என் தாயின் நினைவுகளே மறையத் தொடங்கிய நேரம் அது. வைகையாற்றங்கரையில் உறங்கும் மதுரையின் நிஜமான முகத்தைக் கண்டேன். இவ்வனுபவத்தால் தூண்டப்பட்டு 'எழுக மதுரை' என்ற தலைப்பில் கவிதையொன்று எழுதினேன். அவ்வனுபவம் ஒரு பாட்டாக மட்டும் முகிழ்த்து விட்டு, மீண்டும் அடிமனசில் உறங்கப் போய்விட்டது. இப்போது, மறுபடியும் ஒரு நாடகமாக மலர்ந்து, உங்கள் கைகளில் தவழ்கிறது.

2

கன்னடமொழியில் எழுதுகிறவனாக இருந்தாலும் கூட, என் உணர்வுகள் வெறும் கன்னடமயமானவை அல்ல; தமிழ்மயமான சில உணர்வுகளும் என்னிடம் உண்டு. பள்ளிக்கூட ஆசிரியர்கள் எனக்கு கன்னடம், ஆங்கிலம், இந்தி என கற்பிக்கும் முன்பேயே, என் தாய் எனக்குக் கற்பித்த மொழி தமிழ். என் உணர்வுகளின் வேர்கள் தமிழ்நிலத்திலும், தமிழ். மொழியிலும், தமிழ்க் கலாச்சாரத்திலும் அமிழ்ந்திருக்கின்றன. அதன் கதைகளோடும், புராணங்களோடும் பிணைந்திருக்கின்றன. என் மனத்தை முழுக்க முழுக்க முதலில் வெற்றி கொண்ட நகரம் மதுரை. ஒரு பத்தினிப் பெண்ணின் கணவன் அநியாயமாகக் கொல்லப்பட்ட நகரமாக இருந்தாலும்கூட. ஓர் அரசனையே தடம் மாற்றவல்ல பொற்கொல்லன் வாழ்ந்த நகரமாக இருந்தாலும்கூட.

பிறகு இன்னொரு நகரமும் என்னைக் கவர்ந்தது. கல்யாண தேசம். துறவிகள் வாழ்ந்த நகரம் அது. மேல் தட்டுக் கூட்டமே சேர்ந்து நின்று ஒரு கட்டளையை எதிர்த்த நகரம் அது.

பசவண்ணனைப்பற்றியும் அவரைப் பின்பற்றும் துறவிகள் பற்றியுமான என் நாடகங்கள் தீர்மானமான உட்கருக்களால் உருவானவை. ஆனால் சிலப்பதிகாரம் தொடர்பான இந்நாடகம் ஆழ்மனப் பரப்பில் விரியும் கற்பனையோடு சேர்ந்து உருவானது.

3

இந்நாடகத்தில் நான் கையாண்டுள்ள பொருளானது, இறந்துபோன என் தாயாரின் முகத்தைப் போலவே நெருக்கமானதும், பழமை வாய்ந்ததும் ஆகும். இந் நாடகத்தை எழுதத் தொடங்கும் முன்பு சிலப்பதி காரத்தை மீண்டும் ஒருமுறை படித்தேன். அதன் மொழி பெயர்ப்பையும் படித்தேன். ஆனால் அவை எனக்கு அவ்வளவாகப் பயன்படவில்லை. கதைப்படிமங்கள், என் மனசில் ஞாபகங்களாகப் படிந்திருந்த கண்ணகி யின் கதையிலிருந்தே உருவாகின. எழுத எழுத படிமங் கள் ஒன்றோடொன்று மோதின, இணைந்தன, விலகின. அதன் முடிவுதான் இந்நாடகம்.

4

கன்னட நாடக அரங்கில் இந்நாடக அரங்கேற்ற மானது குறிப்பிடத்தக்க வெற்றியை அடைந்தது என்றே சொல்லலாம். 'வெற்றி' என்று நான் சொல்லக் காரணம்,

இது உருவாக்கிய எதிர்வினைகள் இரு வேறு தன்மை யுடையனவாய் சரிசமமாய் இருந்தன என்பதுதான்.

ஒரு தமிழ் நண்பரின் கடிதம் எனக்கு மிகவும் உற்சாகம் ஊட்டுவதாக இருந்தது. நிஜ சிலப்பதிகாரக் கதையில் இருந்து ஏன் இத்தனை விலகல்கள் என்று அவர் கேட்டிருந்தார். சிலப்பதிகாரத்தின் சில பகுதிகள் ஆதாரபூர்வமானவை என்றும், முடிவானவை என்றும் சுலபமாக நிறுவிக்காட்ட முடியும். ஆனால் அதனால் என்ன பயன்? இறுதியான வடிவத்தோடு எனக்கு எந்த வேலையும் இல்லை. ஆனால் நான் விரும்பும் அதன் மூலக்கதையோடுதான் என் உறவு. மேலும் அக் காவியத் தின் இறுதிவடிவம் அல்லது முடிவு கேள்விக்குள்ளாக்கப் படவேண்டும் என்பதுவும் என் விருப்பம். எல்லா நூல் களின் இறுதி அமைப்புகளும் மறைந்த மதிப்பீடுகளைப் பாதுகாக்கின்றன. படிமங்கள், சூழல்கள், பாத்திரங் களுக்கான தேடல் முயற்சிகள் மட்டுமே புதிய மதிப்பீடு களை உருவாக்க முடியும். 'எதற்காகவோ அடையாளச் சின்னமாக அவை இருக்கின்றன என்பதால் அல்ல, அவற்றின் நிறமும் பக்கமும்தான் என் மனதைக் கொள்ளை கொள்கின்றன' என்பது ஈட்ஸின் வரி. கண்ணகி கதையின் சில சூழல்கள், சில பாத்திரங்கள், சில படிமங்களை வைத்துக்கொண்டு என் ஆவல்களை யும் நினைவுகளையும் கலந்து உருவாக்கப்பட்டதுதான் இந்நாடகம். இம்முயற்சி ஏற்புடையதுதானா என்று தீர்மானிப்பதை வாசகர்களுக்கு விட்டுவிடுகிறேன்.

இந்நாடகத்தை ஒரு கற்பனைக் காவிரி என்று சொல்ல விழைகிறேன். என் தமிழ் மற்றும் கன்னட குணங்களுக்கு நீர்பாய்ச்சி வளப்படுத்தும் காவிரி.

5

இதைத் தமிழில் மொழிபெயர்த்த நண்பர் பாவண்ண னுக்கும், வெளியிட்ட 'காவ்யா'விற்கும் என் நன்றிகள். கன்னடத்தில் பிரசுரமாகும் முன்பேயே தமிழில் பிரசுர மாவது எனக்கு மிகவும் மனநிறைவைத் தருகிறது சற்றே தாராளமனத்துடன் தமிழ் வாசகர்கள் இதை ஏற்றுக் கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொள் கிறேன். தமிழர்களின் செழுமையான கதைகளை ஒரு புத்திசாலியாக அறிந்து அணுகாமல், மீட்க முடியாத தன் இளமையோடு இரண்டறக் கலந்துவிட்ட அக்கதை களின் மீது ஊறிய அன்பால் அணுகியே இது எழுதப் பட்டது.

இந்நாடகத்தின் அமைப்பைப்பற்றிச் சில வார்த்தை கள் சொல்ல விழைகிறேன் :

குஜராத்தி மொழிக் கவிஞரும், விமர்சகரும், சமஸ் கிருத வல்லுனருமான திரு. அஜித் தாகுர் இந்நாடகத்தைப் பார்த்த பிறகு இதை 'கெயா ரூபகா' என்று வகைப் படுத்தலாம் என்றார் இத்தலைப்பு இந்நாடகத்திற்கு மிகவும் பொருந்திப் போகிறது, ஏனைய சில தலைப்பு களும் பொருந்தினாலும் கூட. அரங்க அமைப்பிலும், நாடக உருவாக்கத்திலும் நம் முந்தைய தலைமுறையினர் தொடர்ந்து செலுத்திய அக்கறையும், பயிற்சிகளும் இந்திய நாடக அரங்க உலகில் சில வடிவங்களுக்கு முதன்மைத் தகுதியைத் தேடித் தந்திருக்கின்றன. சில நாடக அகாடமிகளும் ஃபோர்டு ஃபௌண்டேஷனின் நிதியுதவி பெறும் ஆள்களும் மட்டுமே சில அரைகுறை பத்திரிகை ஆசிரியர்களாலும் விமர்சகர்களாலும் நாடகத் துறை சாதனையாளர்களாக நிறுவிக்காட்டப்படுகிறார்.

கள். இவ்வெண்ணத்தை மாற்றி நிறுவிக்காட்ட ஒரு தலைமுறை காலமாக என் முயற்சிகளைத் தொடர்ந்து முன்வைத்துக் கொண்டு இருக்கிறேன். பன்முகத் தன்மை வாய்ந்த நம் பழைய இலக்கியங்கள் ஊடேயும் நாட்டுப் புறக் கலாச்சாரக் கூறுகள் ஊடேயும் பொதிந்து கிடக்கிற காவியத்தன்மை கொண்ட நாடகக் கூறுகளையும், நாடக வழக்குகளையும் கண்டெடுத்து புனரமைப்பு செய்வதன் மூலம் என் முயற்சியைத் தொடர்கிறேன். நாடக அமைப்புகள் ஏற்கனவே நம் மனசில் விதைத்து விட்டிருக்கிற நாடகக் கருத்துகளோடு இந்நாடகம், ஒரு வேளை ஒத்துப் போகவில்லை எனில் கொஞ்சம் நிறுத்தி திறந்த மனத்துடன் மீண்டும் படிக்குமாறு கோருகிறேன். படிப்பீர்கள் அல்லவா ?

31-3-93
பெங்களூர்

மிக்க அன்புடன்
எச். எஸ். சிவப்பிரகாஷ்

பாத்திரங்கள்

கல் உடைக்கும் ஆண்கள்
கல் உடைக்கும் பெண்கள்
கோவலன்
கண்ணகி
கவுந்தி அடிகள்
பாண்டியராஜன்
மதுரை வணிகர்கள்
கௌசிகன்
பொற்கொல்லன்
மதுரை அரசன்
காவல்காரன்
படைவீரன்

(மதுரை மாநகரின் புறவெளியில் கல் உடைக்கும் ஆண்களும், பெண்களும் வருகிறார்கள்)

கல் உடைப்பவர்கள் : கல் உடைப்பவங்க-நாங்க
கல் உடைப்பவங்க
கல் உடைப்பவங்க நாங்க
கல் உடைப்பவங்க
கல் உடைப்பவங்க-நாங்க
கல் உடைப்பவங்க
கல்லின் இதயத்தை-தினமும்
உடைச்சிப் பார்ப்பவங்க
உடைச்சி உடைச்சி கல்லின் மனசை
தெளிவா புரிஞ்சவங்க
கல் உடைப்பவங்க-நாங்க
கல் உடைப்பவங்க.

கல் உடைக்கும் ஆண் 1 : கடலோரங்களில் இருந்தும் மலையடிவாரங்களில் இருந்தும் அடர்ந்த காடுகளின் நடுவே தன்னையே மறைத்துக் கொண்டிருக்கும் சின்னச் சின்ன மூலை முடுக்குகளில் இருந்தும் மதுரை மாநகர பெருவாசலை நோக்கி சோறு, தண்ணீர், பாதுகாப்பான ஒரு குடிசைக்காக அலைந்து குடிபெயர்ந்து வந்தவர்கள் நாங்கள்.

எல்லாரும் : கல் உடைப்பவங்க-நாங்க
கல் உடைப்பவங்க;

கல் உடைக்கும் ஆண் 2 : இந்த நகருக்குள் குடியேறியவர்கள் நாங்கள் மட்டுமல்ல. கடலிலே முழுகின படகின் பிரயாணிகள் எப்படியோ மெல்ல மெல்ல நீந்தி கரை சேர்வது போல ஒவ்வொரு

நாளும், ஒவ்வொரு இரவிலும் ஆயிரக்கணக்கான பேர்கள் வந்துகொண்டே இருக்கிறார்கள்.

எல்லாரும் : கல் உடைப்பவங்க-நாங்க
கல் உடைப்பவங்க.

கல் உடைக்கும் ஆண் 3 : கூப்பிடாமலேயே வந்து சேர்ந்த பட்டினிப் பட்டாளத்தில் எங்கள் கும்பலும் ஒன்று. யாராக இருந்தாலும், எந்த நேரத்தில் வந்து கதவைத் தட்டினாலும், வாசல் திறந்து வரவேற்று அவரவர்களின் உழைப்புக்குத் தகுந்த ஊதியம் பெற வைத்து வாழவைக்கிற இந்த நகரம் எங்களுக்குக் கொடுத்திருக்கிற வேலை இதோ இதுதான்...

எல்லாரும் : கல் உடைப்பவங்க-நாங்க
கல் உடைப்பவங்க.

கல் உடைக்கும் பெண் 1 : எவ்வளவு வளர்ந்தாலும் போதாது என்பதுபோல் வளர்ந்து கொண்டே இருக்கிறது இந்நகரம்.

கல் உடைக்கும் பெண் : 2 ஆமாமாம். போதாது என்பதுபோல, கடன் கொடுக்கிற பணக்காரனின் திடமான பெருவயிற்றைப் போல,மலைநாட்டின் கல்லையும் வயல் நாட்டின் மண்ணையும் கடலோர மணலையும் வயிறு நிரம்ப உண்டும் பசியோடயே இருக்கிறது, மீண்டும் மீண்டும்.

எல்லாரும் : கல் உடைப்பவங்க-நாங்க
கல் உடைப்பவங்க.

கல் உடைக்கும் ஆண் 1 : எல்லாவற்றையும் விழுங்கிக் கொண்டும், ஒன்றோடொன்று மோதிக் கொண்

டும் சுற்றிலும் தோன்றிக்கொண்டே இருக்கும் கோயில்கள், பணம் வைத்திருப்பவர்களின் மாட மாளிகைகள், தரித்திரக் குடிசைகள்......

கல் உடைக்கும் ஆண் 2 : கல் உடைப்பவங்க நாங்க.

கல் உடைக்கும் ஆண் 1 : இதுதான் நாங்கள் வேலை செய்யும் இடம்.

கல் உடைக்கும் பெண் 1 : இங்கிருந்து தடுக்கி விழுந்தால் போதும், அதோ அந்த குன்றின் அடிவாரத்தில் எங்கள் ஏழைக் குடிசைகளில் இருக்கலாம்.

கல் உடைக்கும் ஆண் 2 : இங்கேயே எங்கள் வேலை.

கல் உடைக்கும் பெண் 2: அங்கேயே எங்கள் வீடு.

எல்லாரும் : கல் உடைப்பவங்க—நாங்க
கல் உடைப்பவங்க.

கல் உடைக்கும் ஆண் 1 : இப்போது பட்டபகலின் நெருப்பாய் எரிகிறது வெயில். ஆனாலும் எங்கள் உளி சுத்தியல்களுக்கு ஓய்வே இல்லை.

கல் உடைக்கும் பெண் 1 : அதிருக்கட்டும், அங்கே பாருங்கள். செடி கொடி மரங்கள்கூட ஓய்வு கொள்ள நினைக்கிற இந்த சமயத்தில் நம் பக்கமாக தள்ளாடித் தள்ளாடி சிரமப்பட்டு வருகிறார்களே, யார் அவர்கள்?

கல் உடைக்கும் பெண் 2 : யாராய் இருப்பார்கள் அவர்கள்? வெயில் என்னும் நெருப்புச் சித்திரத்தில் கருணை எழுதிய மூன்று உயிருள்ள சித்திரங்கள்.

கல் உடைக்கும் ஆண் 2 : நெருங்க நெருங்க தெளிவாகத் தெரிகிறது.

கல் உடைக்கும் பெண் 1: புழுதி படிந்து அழுக்காகிய வெள்ளைப் புடவை உடுத்தி இருக்கிற ஒரு வயசான பெண்மணி...

கல் உடைக்கும் ஆண் 2: துணிகிழிந்து, தலைகலைந்து, முகம் வாடி, உடல் தளர்ந்து சின்ன வயசிலேயே கிழவனாகி விட்டவன் போல தெரிகிற ஒரு ஆள்...

கல்உடைக்கும் பெண் 2: ஆனால் என் மனசு பதறுவது இந்த இருவரையும் பார்த்து அல்ல. மூன்றாவதாக வருகிறாளே அவளைப் பார். நடக்க முடியாமல் உட்கார்ந்து, உட்கார முடியாமல் எழுந்து மீண்டும் நடக்க முடியாமல் இடிவிழுந்த கம்பம் போல நடந்து வரும் அந்த பெண்...

கல் உடைக்கும் ஆண் 1: அவர்களைப் பார்த்தால் பிறப்பிலேயே ஏழைகள் போல தெரியவில்லை.

கல் உடைக்கும் பெண் 1: அது எப்படித் தெரியும்?

கல் உடைக்கும் ஆண் 1: வறுமையைக் குறிக்கும் சாதாரண உடைகள் நம்மைப்போன்ற தரித்திரர்களுக்குத்தான் மிகச் சரியாகப் பொருத்தமாக இருக்கும்.

கல் உடைக்கும் ஆண் 2: அரசனின் தலைக்கு, அவனுடைய கிரீடம் பொருந்துவது போல.

கல் உடைக்கும் ஆண் 1: பயில்வானின் கால்சட்டை அவனது இடுப்புக்குப் பொருந்துவது போல அல்லது சுவர் விரிசல் பல்லி, வண்டு, பூச்சிகளுக்குச் சரியாக இருப்பது போல.

கல் உடைக்கும் பெண் 1 : பாவம் ஏதோ நாடோடிகள் வேஷம் போட்ட ராஜா ராணியைப் போலவே அவர்கள் இருக்கிறார்கள்.

(கவுந்தி அடிகள், கோவலன், கண்ணகி மூவரும் வருகிறார்கள்.)

(பாடல் ஒலிக்கிறது)

பேரழகு பொலிவிழக்க பெருந்துயரம்குடியிருக்க
தட்டுத் தடுமாறி வருகிறார்கள்.

அஞ்சாதே என்கின்ற வைராக்கியப் பெருந்தேவி
கூட வருகின்றாள் அவரோடு.

கல்லிடையே முள்ளிடையே அகப்பட்டுத் தடுமாறும்

பாதையில் தெளிவு பிறக்கட்டும்.

கல்போன்ற மனத்துயரம் உனக்கல்ல எப்போதும்

பூமியில் மங்களம் பெருகட்டும்.

கவுந்தி அடிகள் : அப்பா, கல் உடைக்கிறவங்களே. பசியாலும் தாகத்தாலும் எங்கள் கண்கள் மங்கிவிட்டன. என் மந்தமான பார்வையில் தொலைவில் நெடிதுயர்ந்து காணப்படுகிறதே, அது என்ன?

கல் உடைக்கும் ஆண் 1 : அதுதான் மதுரை மாநகரின் பெருவாசல். நீங்கள் யார் அம்மா?

கவுந்தி அடிகள் : நான் ஒரு சமணப் பெண். என் பெயர் கவுந்திஅடிகள். இதற்கு முன் நான் என்னவாக இருந்தேனோ, அது பாவ, அஞ் ஞானங்களின் சரித்திரம். மதுரை மாநகரின் வெளிப்புறத்தில் பேர்பெற்றிருக்கும் சமணர்கள் ஆசிரமத்தில் என் கடைசிக் காலத்தைக் கழிக்க

லாம் என்று வந்திருக்கிறேன். வரும் வழியில் கணவன் மனைவியான இவ்விருவரும் துணையானார்கள். ஐயோ, தாகமாக இருக்கிறதே.

கல் உடைக்கும் ஆண் 1 : போங்க யாராவது சீக்கிரம் தண்ணீர் எடுத்து வாங்க.

கல் உடைக்கும் ஆண் 2 : (கோவலனிடத்தில்) வாழ்க்கை என்னும் வசந்தத்தின் தொடக்கத்திலேயே கடும்வெயிலின் கோபத்துக்குப் பலியாகி இருக்கும் இளந் தம்பதிகளே, நீங்கள் யார்?

கவுந்தி அடிகள் : பாவம் அவர்கள் இருவருமே வெயிலால் தகிக்கும் நிலத்தில் சுருண்டு விழுந்து கிடக்கிறார்கள். பேசுவது ஒரு பக்கம் இருக்கட்டும், மூச்சிழுக்கக் கூட அவர்களிடம் இப்போது சக்தியில்லை. அவர்கள் சார்பாக நானே சொல்கிறேன். அவன் கோவலன். புகார் நகரத்தின் பெரிய வியாபாரியான மாசாத்துவான் என்பவனின் ஆசை மகன். அதே நகரத்தைச் சேர்ந்த இன்னொரு செல்வந்தனின் மகள் இவள். கண்ணகி. இவனுடைய மனைவி. பூர்வஜென்ம பலன் காரணமாக யாருக்கும் தெரியாமல் இவர்கள் இருவருமே ஊரை விட்டு வர நேர்ந்துவிட்டது. புதிய வாழ்க்கை என்னும் கனவு அவர்களை இது வரைக்கும் அழைத்து வந்து விட்டது. (கல் உடைக்கும் பெண் ஒருத்தி நீர் கொண்டு வருகிறாள்.)

கவுந்தி அடிகள் : (தண்ணீர்ச் செம்பை கவுந்தி அடிகள் வாங்கி கண்ணகியிடம் கொடுத்து, அவளது தலையை ஆதரவுடன் தடவி விடுகிறாள்.)

அம்மா, கண்ணகி, ஏதோ பழைய ஜென்மத்துச் சம்பந்தம்தான் நம்மைச் சேர்த்து வைத்தது. இப்போது பிரிகிற சமயம் வந்துவிட்டது. என் தலையில் இருந்த பட்டுப் போன்ற கூந்தலை மழிக்கும்போது அதனோடேயே என் பந்தங்களையும் கழற்றி வீசிவிட்டு சமணத் துறவியானேன். உன் முகத்தைப் பார்த்ததுமே, என் நெஞ்சில் அன்பு எப்படிப் பொங்கியதோ, எனக்கே தெரியவில்லை. சரி, நான் கிளம்புகிறேன்.

(கோவலனை நோக்கி)

அதோ, அங்கே அந்த கோபுரம் தெரிகிறதே, அந்த இடம்தான் அநேகமாக சமணத் துறவிகளின் ஆசிரமங்களாக இருக்க வேண்டும்.

கல் உடைக்கும் ஆண் 1 : புகழ்பெற்ற அந்த ஆசிரமம் அதுதான் அம்மா.

கவுந்தி அடிகள் : அப்பா கோவலா, உங்களோடு சேர்ந்து செய்த இந்த பிரயாணத்தில் எந்த அளவுக்கு என் மனம் பாதிக்கப்பட்டிருக்கிறது என்றால், துறவியாகிய என் கண்களும்கூட நனைந்து விட்டன. இன்னும் ஒரு நாழிகை இங்கு இருந்தாலும்கூட, என் வைராக்கியத்துக்கு எதிரான உணர்வுகளுக்கு ஆட்பட்டு மூழ்கி விடுவேனோ என்று பயம் உண்டாகிறது. சீக்கிரமாக இந்த நகர்க்குள் சென்று வணிகர் தெருவைக் கண்டுபிடித்துச் செல். உன் தந்தையின் பெயரையும், அவரது செல்வாக்கைப் பற்றியும் அவர்களுக்கு தெரியப்படுத்து. அவர்களில் யாராவது உன்மேல் இரக்கப்பட்டு நீ சொந்தக் காலில் நிற்கும்படி ஏதேனும் ஒத்தாசை செய்வார்கள். உன் பூர்வ ஜென்ம புண்ணியங்கள் உனக்குத் துணையிருக்கும்.

கல் உடைக்கும் ஆண் 2 : தாயே, எங்கள் குடிசைகளுக்கு வந்து சாப்பிட்டுவிட்டுக் கிளம்பலாம் அல்லவா?

கவுந்தி அடிகள் : என் துறவுக் கடமை என்னை அழைக்கிறது. அப்பா, கல்உடைப்பவனே, உன் முகத்தைப் பார்த்தால் கல் உங்கள் தொழில் மட்டுமே தவிர, உன் மனம் கல் அல்ல என்றே தோன்றுகிறது. அனாதைகளாக இந்த நகர்க்குள் பிழைக்க வந்திருக்கும் இவ்விருவர்க்கும் நானே தாய் தந்தையாக இருந்தேன். இனி, அவர்களை உங்கள் பாதுகாப்பில் விட்டுச் செல்கிறேன். அம்மா, கல் உடைப்பவளே, இந்த பெண் இன்னும் ஓரடி எடுத்து வைத்தாலும்கூட உயிரே பிரிந்து விடுகிற அளவுக்குக் களைத்துப் போய் இருக்கிறாள். இவளது கணவன் வியாபாரத்துக்கு ஒரு வழியைத் தேடி அமைத்துக் கொண்டு திரும்பி வரும் வரைக்கும் இவளைக் கவனமாக பார்த்துக் கொள்ளுங்கள். உன்னை விட வயசில் பெரியவளாக இருந்தாலும்கூட, இந்த உலகத்தைத் துறந்த துறவி என்கிற பெயருக்கு உரியவளானாலும்கூட, இந்த உதவியைச் செய்ய வேண்டுமென்று நானே உன்னை வேண்டிக் கொள்கிறேன். இதுவே நீ எனக்குக் கொடுக்கும் பிச்சை.

கல் உடைக்கும் பெண் 1 : தாயே, உங்கள் வரவால் இந்த இடமே புனிதமானது. உலகைத் துறந்த துறவியாகிய உங்கள் மனத்திலேயே இவளுக்காக இந்த அளவு அன்பும், ஆதரவும் பிறந்திருக்கும்போது, இந்த உலகத்தின் கஷ்டங்களின் வலையில் அகப்பட்டுத் தவிக்கிற எங்கள் மனம் எப்படித்தான் கரையாமல் இருக்கும்? இவள் பொறுப்பு இனி எங்களுடையது.

5-9984

கவுந்தி அடிகள் : அப்படியென்றால் என் இதய பாரத்தை இங்கேயே இறக்கி வைத்துவிட்டு புறப்படுகிறேன்.

கோவலன் : அடிகளே! இனி மௌனத் தவங்களில் மூழ்கிப் போகும் முன்பு நிச்சயமின்மை என்னும் பெருவாசலில் உறுதியற்று நிற்கின்ற என் மனத்தில் உறுதியையும், தைரியத்தையும் நீங்கள் நிரப்பிவிட்டுச் செல்ல வேண்டும்.

கவுந்தி அடிகள் : அஹிம்சையும், சத்தியமும் தான் எல்லா நோய்களுக்கும் மருந்து. போன ஜென்மத்து தீவினைகளின் பயன்களைத்தான் இப்போது நாம் அனுபவித்துக்கொண்டிருக்கிறோம். என் கடைசி வார்த்தை இதுதான். அறவழியை விட்டு எப்போதும் விலக வேண்டாம்.

(கல் உடைப்பவர்களிடம்)
உங்களுக்கும் இதுவே என் உபதேசம்.

(கண்ணகியிடம்)
போய் வருகிறேன் மகளே.

(எல்லாரும் அடிகளை வணங்குகிறார்கள். அடிகள் கிளம்புகிறார்)

(பாட்டு)

மங்களம் பெருகட்டும் மங்களம் பெருகட்டும்
பூமியில் மங்களம் பெருகட்டுமே.

முழுநிலவு வந்தவுடன் விலகுகிற இருள்போல
துயரங்கள் எல்லாம் விலகட்டுமே.

பயமெதுவும் இல்லாமல் கஷ்டமும் பாராமல்
பாடித் தும்பி பறக்கிறதே.

என் சொல்லை நம்புங்கள் என்சொல்லை நம்புங்கள்
என்கிற அதன் குரல் கேட்கிறதே

கோவலன் : (கல் உடைப்பவர்களிடம்) நகரத்தை அடைவதற்கு முன்னாலேயே நல்ல சகுனம் போல உதவிகள் செய்யும் அன்புடையவரே, உங்கள் அன்பாலும், கருணையாலும் என் களைப்பு நீங்கிவிட்டது. இப்பொழுது நான் இந்த நகரின் வணிகர் தெருவுக்குக் கிளம்பு கிறேன். என் அதிர்ஷ்டத்தை இன்றைக்கே சோதித்து விடுகிறேன்.

கல் உடைக்கும் பெண் : இன்று முழுக்க ஓய்வெடுத்துக் கொண்டு நாளை கிளம்பலாமே.

கோவலன் : பெருவாசலில் நல்ல சகுனங்கள் தெரிகிற இந்த நல்ல நாளில், இந்த முக்கியமான வேலை யைச் செய்யாமல் தள்ளிப் போடுவது நல்ல தல்ல. கண்ணகி, நீ ஓய்வெடுத்துக் கொள். நம் எல்லா முயற்சிகளிலும் வெற்றி கிடைக்கட்டும் என்று குலதெய்வங்களிடம் பிரார்த்தனை செய்து கொள்.

கல் உடைக்கும் பெண் : உங்கள் வேலையை முடித்துக் கொண்டு வாருங்கள். அவளைப் பார்த்துக் கொள்ளும் பொறுப்பு எங்களுடையது.

(கோவலன் புறப்பட்டு மறைகிறான்.)

(கல் உடைக்கும் பெண்களுடன் கண்ணகியும் நடந்து மறைகிறாள்)

கல் உடைக்கும் ஆண் 1 : ஏதோ துரதிர்ஷ்டத்தில் அகப் பட்டுக் கொண்ட லட்சுமி தேவி வந்தது போல எங்கள் குடிசைகளுக்கு வருகை தந்திருக்கிறாள் இந்த சுமங்கலி. எங்கள் பெண்கள் அவளைக் கவனமுடன் பார்த்துக் கொள்கிறார்கள். உடல்

அழுக்கு போக அவளை நல்லபடி குளிப்பாட்டுகிறார்கள். அழுக்கில் கசடாகிச் சிக்கிக் கொண்ட கூந்தலைப் பிரித்து பின்னல் இடுகிறார்கள். அவள் உடைகளை விடுத்து தமது மடிப்புடவையையும் ரவிக்கையையும் உடுத்தி விடுகிறார்கள்.

கல் உடைக்கும் பெண் 1 : (உள்ளே வந்து)
அதெல்லாம் முடிந்துவிட்டது. ஆனால் சமையலுக்கு இப்போது என்ன வழி? பணக்காரியாக வாழ்ந்தவளாகிய இவளுக்கு நம்முடைய பழைய சோற்றையும், மிச்சம் மீதியையும் எப்படிக் கொடுப்பது?

கல் உடைக்கும் ஆண் 1 : ஒரு வழி இருக்கிறது. பாண்டியராஜன் வரும் வரைக்கும் நன்றாக தூங்க வைத்துவிடு.

கல் உடைக்கும் பெண் 1 : அதற்குத்தான் சொல்வது. ஆண்களுக்கே புத்தி குறைச்சல் என்று. வெறும் வயிறோடு இருக்கும்போது தூக்கம் எப்படி வரும்?

கல் உடைக்கும் ஆண் 2 : அதுவும் சரிதான். எங்கே அந்த பாண்டியராஜன்?

கல் உடைக்கும் ஆண் 1 : இப்படியே கொஞ்ச நேரம் கழிந்த பிறகு, இன்றைக்கு அது என்ன அதிர்ஷ்டமோ தெரியவில்லை. வழக்கத்தை விடவும் சீக்கிரமாக அன்றைக்கு வந்து சேர்ந்தான் பாண்டியராஜன்.

ராஜா—
வந்தான் ராஜா—

எங்க ராஜ மகாராஜா...(ராஜா)

சூரியன்போல் பொலியும் அவன் தேகம்
தீரசூரனுக்கு எல்லாமே தேசம்
கண்கட்டி செய்வானோ மோசம்...
(ராஜா)

ஒட்டுச்சட்டை சுற்றிய உடம்பு
குதிரைமேல் வருவான் விரைந்து
வந்தது அம்பாரி, வந்து சேர்ந்தது...
(ராஜா)

(பாரமான ஒரு சாக்கு மூட்டையைத் தூக்கிய படி ஏறத்தாழ 13 வயதுப் பையன் - பாண்டிய ராஜனின் வருகை. அந்த சாக்கு மூட்டையை கல் உடைப்பவர்களிடம் கொடுக்கிறான்.)

கல் உடைக்கும் பெண் 1: இந்த பையன் ஒரு அனாதை. சிட்டுக்குருவியைப் போல சுறுசுறுப்பு. ஒரு குதிரையைப் போல துள்ளாட்டம். தினந் தோறும் எங்கிருந்தோ; எப்படியோ தானியம், காய்கறி, மாமிசம் எல்லாவற்றையும் சுமந்து வந்து எங்களுக்குக் கொடுக்கிறான். இவை யெல்லாம் எப்படிக் கிடைக்கின்றன? நாங்களும் கேட்பதில்லை. அவனும் சொல்வதில்லை.

(கல் உடைக்கும் பெண் மறைகிறாள்)

(இன்னொரு திசையில் இருந்து பாண்டிய ராஜன் வருகிறான்)

கல் உடைக்கும் ஆண் 1: இன்றைய தினம் எங்கள் பெண்கள் அந்த ஏழைகளுக்காக விசேஷ விருந்துக்காக ஏற்பாடு செய்யலாம். எல்லாருக் கும் முதலில் நானே ருசி பார்க்கிறேன்.

(கல் உடைக்கும் ஆண் 1 புறப்பட்டு மறைகிறான். எல்லாரும் மறைகிறார்கள். கல் உடைக்கும் ஆண் 2 மட்டும் மேடையில் நிற்கிறான்.)

கல் உடைக்கும் ஆண் 2 : அங்கே, வணிகர் தெருவைக் கண்டுபிடித்துச் சேர்கிறான் கோவலன். அவனுடைய புதிய வாழ்வின் நாட்டிய மேடையான மதுரை, பரிச்சயமில்லாத அவன் கண்களுக்கு எப்படித் தெரிந்திருக்கும்? இப்போது அவன் ஆசை கை கூடுகிறது. அவனது வாழ்வில் புதிய திருப்பம் நேரக் கூடும்.
(கோவலன் வருகிறான்)

கோவலன் : அம்மாடி, இந்த நகரத்தின் முன்னால் புகார் ஒரு நகரமே அல்ல. இங்கே முல்லை, மல்லிகை, செண்பகப் பூக்களின் வாசனையை உட்கொண்டு, இந்த கடும் வெயிலில்கூட, எத்தனை இதமாக வீசுகிறது காற்று. மாடங்களில் ஏறி, சாளரங்களில் படர்ந்து சிரிக்கிற கொடிகளில் மலர்ந்திருக்கும் மிருதுவான பூக்களைப் பறித்து பின்னலில் சூடிக் கொண்டு சகல அலங்காரங்களுடன் செல்லும் அந்தப் பெண்களின்... ஓ... எனக்கு மறுபடியும் மாதவியின் ஞாபகம். இந்த அழகு நடுத்தெருவில் நிற்கிற நிலைமைக்கு என்னை ஆக்கினாலும், மறுகணமே அந்த ஞாபகம். பதிவிரதையான கண்ணகியின் அழகை நினைத்து திடமனசோடு வணிகர் தெருவை அடைகிறேன்.

(மூன்று வணிகர்கள் வருகிறார்கள்)

(பாட்டு)

வந்தாங்க வந்தாங்க வியாபாரிங்க வந்தாங்க
எச்சரிக்கை எச்சரிக்கை

சும்மா கிடைச்சாக்கா உன் வீட்டையும் விழுங்கு
வாங்க
எச்சரிக்கை எச்சரிக்கை
விலைசொல்லி வித்தாக்கா கைலாசத்த
வாங்குவாங்க
எச்சரிக்கை எச்சரிக்கை
வைகுண்டத்தில் இருக்கிற லட்சுமியையும்
வாங்குவாங்க
எச்சரிக்கை எச்சரிக்கை

வணிகர் 1: இது யாரு? இங்க எப்படி வந்தான்? எங்கேயாவது கோயில் வாசலிலே போய் நிற்க வேண்டிய ஆள் இங்கே எதுக்கு வந்தான்?

வணிகர் 2 : இந்த மாதிரி தரித்திரம் புடிச்சவனுங்க நிழல் நம்ம தெருவிலகூட விழக்கூடாது. விழுந்த துன்னு வை, லட்சுமி இந்த பக்கமே தலைவச்சி படுக்கமாட்டா.

வணிகர் 3 : பக்கத்து ஊரிலேர்ந்து தப்பிச்சி வந்த தீவிர வாதி மாதிரி இருக்கறான். நீங்க ரெண்டுபேரும் அவன் மேல ஒரு கண் வச்சிருங்க. அதுக் குள்ளாற நான் கச்சேரிக்குப் போய் சொல்லிட்டு வந்திடறேன்.

வணிகர் 2 : நானும் வரேன்.

வணிகர் 1 : வேணாம், நீ இங்கேயே இரு, நான் தனியா இருந்தா ஏதாச்சிம் எக்கச்சக்கமா செஞ்சாலும் செய்யலாம், இன்னைக்குன்னு பார்த்து ஒரு பிச்சைக்காரன்கூட யாரும் காணோம்.

கோவலன் : வணிக குலமணிகளே. உங்கள் சந்தேகம் ஆதாரமற்றது.

வணிகர் 1 : ஆதாரமில்லை என்பதற்கு என்ன ஆதா ரம்?

கோவலன் : புகார் நகரத்தின் பெரிய வணிகன் மாசாத்துவானின் பெயரை நீங்கள் கேள்விப் பட்டிருப்பீர்கள் இல்லையா?

வணிகர் 1 : அவன் பெயர் யாருக்குத்தான் தெரியாது? எத்தனையோ தடவை வட்டியில்லாமல் எனக்குக் கடன் கொடுத்திருக்கிறான்.

வணிகர் 2 : நான் வியாபாரம் ஆரம்பிக்கறதுக்கு முன்னால முதலீட்டுக்குப் பண உதவி செஞ்சவனே அவன்தான்.

வணிகர் 3 : ஆனால், உங்கள் ரெண்டு பேரைக் காட்டிலும் எனக்குத்தான் அவன் அதிக நெருக்கம். அவன்கூடவே ஏதென்ஸ், ரோம், பாக்தாத் இன்னும் நிறைய ஊருங்களுக்கெல்லாம் போய் வியாபாரம் செஞ்சிட்டு வந்திருக்கேன்.

வணிகர் 1 : அது சரி...அந்த லட்சாதிபதியுடைய பேரை 'பிச்சை போடுங்க சாமி' ன்னு சொல்ல வேண்டிய உன் வாய்ல எப்படிப்பா வந்தது?

கோவலன் : சொந்த ஊரில் இருக்கிற தந்தையின் பெயரை வெளியூரில் இருக்கிற மகனைத் தவிர வேறு யார் நினைத்துக் கொள்ள முடியும்?

வணிகர் : 2 அப்படியென்றால்?

கோவலன் : என்னை நம்புங்கள். நான் மாசாத்துவானின் மகன்.

(வணிகர்கள் சிரிக்கிறார்கள்)

வணிகர் 1 : எந்த உத்தேசத்துக்காக இந்த மாதிரி ஒரு நாடகம் ஆடறே நீ?

கோவலன் : என்னை நன்றாகப் பாருங்கள். என் தந்தையை வெகு நெருக்கத்தில் இருந்து பார்த்த உங்கள் கண்களுக்கு என் முக லட்சணத்தில் அவருடைய அடையாளங்கள் எதுவும் தெரிய வில்லையா?

வணிகர் 1 : எல்லாம் பொய். அப்படிப்பட்டவன் வயித்துல பொறந்துட்டு இப்படி திருவோடு எடுக்கறது எப்படி சாத்தியமாகும்?

கோவலன் : என் கதையைக் கேளுங்கள். நானும் என் தந்தையைப் போல வியாபாரியாகி, அவரைப் போலவே செல்வம் சேர்ந்திருந்தேன். வயது முதிர்ந்த என் தந்தை எனக்குத் திருமணம் செய்து தொழில் பொறுப்பையெல்லாம் என் தோளில் ஏற்றிவிட்டு புகாரில் இருக்கிற ஒரு புத்த விகாரையில் பொழுதுகளைச் கழிக்கத் தொடங்கினார். என் செல்வத்தைக் கண்டு அந்த அதிர்ஷ்டலட்சுமிக்கு அது என்ன வயிற்றெரிச்சலோ தெரியவில்லை. எனக்கே தெரியாமல், மாதவி என்னும் கணிகையர் குலப் பெண்ணிடம் என்னைக் கொண்டுபோய் சேர்த்து விட்டாள். ஒரு புருஷனாக, ஒரு ஒரு மனிதனாக செய்ய வேண்டிய கடமைகளை எல்லாம் முற்றாக மறந்து போனேன். மன்மதனின் சிறையில் அகப்பட்டு மீட்சியின்றி கிடந்தேன். ஒருநாள் மயக்கம் தெளிந்து வீட்டுக்குத் திரும்பியபோது எங்கள் சொத்து அழிந்து விட்டது. என் மனைவி எனக்காகக் காத்திருந்து, காத்திருந்து இளைத்திருந்தாள். சதாகாலமும் அறவழியிலேயே நடக்கிற எங்கள் உறவுக்காரர்கள் முன்பும், ஊர்க்காரர்கள் முன்பும் முகம் காட்டுவது எப்படி என்று புரியாமல் ராத்திரி

யோடு ராத்திரியாக மனைவியை அழைத்துக் கொண்டு ஊரை விட்டுக் கிளம்பி மதுரைக்கு வந்திருக்கிறேன். நீங்கள் சிறிதளவு கடனாகப் பணம் கொடுத்து உதவினால், அதை ஆதார மாய் வைத்து பணம் சம்பாதித்துப் பெருக்கிக் கொண்டு நொந்து போன என் தந்தையாரின் உயிர் பிரியும் முன்பேயே அவரைச் சந்தித்து விடமுடியும். உங்கள் உதவியை என்றென்றும் மறக்கமாட்டேன். தயவுசெய்து ஆதரவு கொடுங்கள்.

வணிகர் 2 : உன் தரித்திர முகத்திலே வியாபாரிக்கு உரிய லட்சணமே இல்லை. இந்த மாதிரி கட்டுக்கதைகளை யாராச்சும் காதுல பூ வச்சிட்டிருப்பான், அவன்கிட்ட போய் சொல்லு. யாராவது குடிகாரங்க இதக்கேட்டு சந்தோஷப் பட்டாலும் படலாம்.

வணிகர் 3 : ஒரு வியாபாரிக்குப் பணம் எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு முக்கியம் நேரம இந்த கட்டுக்கதைங்களுக்கெல்லாம் அந்த நேரத்தைச் செலவு செஞ்சா சங்கத்துக்காரங்க எங்களை திட்டுவாங்க.

கோவலன் : தயவுசெய்து...என்மேல் கொஞ்சம் கருணை காட்டுங்கள்.

வணிகர் 1 : போ ..போ...போய் கோயில் வாசல்ல திருவோடு வச்சிக்கிட்டு உட்காரு. கால்காசு, அரைக்காசு ஏதாவது கிடைக்கும்.

(வணிகர்கள் வெளியேறுகிறார்கள்)

(பாட்டு)

கொடுத்துக் கொடுத்துச் சிவந்த கைகள்
கேட்டு வந்தது என்னவோ (கொடுத்து)

தங்கத் தொட்டிலில் பிறந்து வளர்ந்தவன்
'தா'என்று பிச்சை கேட்கலாகுமோ (கொடுத்து)

லட்சாதிபதியின் மகனாய்ப் பிறந்தும்
கடன்கேட்க வந்தது எதற்காக?
விதியே, உன்றன் விதியே விசித்திரம்
துயர்நமக்குத் தருவது எதற்காக? (கொடுத்து)

கோவலன் : என்...விதியே...வேண்டும் என்று சொல்லி வந்த நூற்றுக்கணக்கானவர்களுக்கு வேண்டியதை எல்லாம் கொடுத்துக் கொடுத்துப் பழகிய என் இந்த கைகளுக்குக் கேட்கும் முறையையும் ஏன் கற்றுத்தரவில்லை? பெருவணிகன் மாசாத்துவானின் மகனாகப் பிறப்பதற்கு முன்னால் தெருவில் அலைகிற பிச்சைக்காரர்களின் மகனாக ஏன் பிறக்க வைக்கவில்லை? இதை எப்படி கண்ணகிக்குத் தெரிவிப்பேன்? கல் உடைப்பவர்களிடமே மீண்டும் திரும்பிச் செல்கிறேன்.

(கோவலன் மறைகிறான்)

(பாட்டு)

கொடுத்துக் கொடுத்துச் சிவந்த கைகள்
கேட்டு வந்தது என்னவோ... (கொடுத்து)
தங்கத் தொட்டிலில் பிறந்து வளர்ந்தவன்
'தா'என்று பிச்சை கேட்கலாகுமோ...
லட்சாதிபதியின் மகனாய்ப் பிறந்தும்
கடன்கேட்க வந்தது எதற்காக?
விதியே, என்றன் விதியே விசித்திரம்
துயர்நமக்கு தருவது எதற்காக? (கொடுத்து)

(கண்ணகி, பாண்டியராஜன் ஆகிய இருவரும் ஒரு பக்கமாகவும், மறுபக்கத்திலிருந்து கல் உடைக்கும் ஆண் 1ம் வருகிறார்கள்)

பாண்டியராஜன் : அக்கா, எனக்கு எப்படி பாண்டிய ராஜன்னு பேர் வந்தது, சொல் பார்க்கலாம்.

கண்ணகி : மௌனமாக இருக்கிறாள்)

பாண்டியராஜன் : யோசனை செஞ்சி சொல், பார்க்க லாம். நல்லா இறுக்கமா கண்ணமூடிட்டு யோசனை செய். நான் பொறுமையா ஒண்ணு லேர்ந்து நூறு வரைக்கும் எண்ணறேன். அதுக் குள்ளாற நீ யோசிச்சி பார்த்துச் சொல். ஒன்று, இரண்டு, மூன்று........

கல் உடைப்பவன் 1 : இந்த பாண்டியராஜன் கொண்டு வந்த பொருள்களைப் பயன்படுத்தி எங்கள் பெண்கள் சமைத்துமுடித்து எவ்வளவோ நேரம் ஆகிவிட்டது. நாங்கள் எல்லாரும் சாப்பிட்டும் முடித்து விட்டோம். ஆனால் கணவன் வரும் வரைக்கும் சாப்பிடுவது இல்லை என்று கண்ணகி அடம்பிடிக்கிறாள். கணவன் இல்லா மல் சாப்பிட்டு அவளுக்குப் பழக்கம் இல்லை யாம். இந்தப் பாண்டியராஜன் அவளோடு ஒட்டிக்கொண்டு விட்டானே. கோவலன் வந்து விட்டானோ, என்னமோ என்று பார்க் கிறேன்.

(கல் உடைப்பவன் மறைகிறான்)

பாண்டியராஜன் : தொண்ணூற்றி எட்டு, தொண்ணூற்று ஒன்பது, நூறு. இன்னும் தெரியலையா உனக்கு? (கண்ணகி தலையை அசைக்கிறாள்)

பாண்டியராஜன் : தெரியலைன்னு ஒத்துக்கோ. என்ன ஒத்துக்கறியா ?

(கண்ணகி மீண்டும் தலையை அசைக்கிறாள்.)

பாண்டியராஜன் : இது அப்பா வச்ச பேரும் இல்ல. அம்மா வச்ச பேரும் இல்ல. ஏன் தெரியுமா ? தெரியலைன்னு ஒத்துக்கோ. ஏன்னு கேட்டா, எங்க அம்மா, எங்க அப்பா யாரயும் எனக்குத் தெரியாது. இந்த பெயரை எனக்கு நானே வச்சிகிட்டேன். அந்த பாண்டியராஜன் இருக்கறானே, அவன் அரண்மனைக்குள்ள ராஜா. இந்தப் பாண்டியராஜன் இங்க கல் உடைக்கிறவங்களுக்கு ராஜா. அக்கா, உன்ன அக்கான்னு கூப்பிடலாமா ?

கண்ணகி : (தலை அசைக்கிறாள்)

பாண்டியராஜன் : எங்க அக்காகூட உன்ன மாதிரியே இருப்பா. அவளும், மாமாவும்தான் என்ன வளத்தாங்க. அப்பறமா என்னாச்சி தெரியுமா? (தெரியாது என்பதுபோல தலையை அசைக்கிறாள் கண்ணகி)

பாண்டியராஜன் : இந்த ஊரில ஒரு லட்சுமி கோயில் கட்டிட்டிருந்தாங்க. அப்ப ஒரு சுவர் சரிஞ்சி மேல விழுந்து அவுங்க ரெண்டுபேரும்......அக்கா, ரொம்ப பசிக்குது! உனக்கு பசிக்கலையா ?

(இல்லை என்பதுபோல தலையை அசைக்கிறாள் கண்ணகி)

பாண்டியராஜன் : எனக்குத் தெரியும். நீ மாமாவுக்காக காத்திட்டிருக்கே. எனக்குப் பசி தாங்க

முடியாதுன்னு மாமா வர்றதுக்கு முன்னாலேயே அக்கா எனக்கு சாப்பாடு போட்டிடுவாங்க.

கல் உடைக்கும் பெண் 1 : (புன்னகைத்தபடி கண்ணகி பாண்டியராஜனை இன்னொரு பக்கத்திற்கு அழைத்துக் கொண்டு போய் சாப்பாடு பரிமாறு கிறாள். பாண்டியராஜன் உண்ணத் தொடங்கு கிறான். பரிமாறுவதும், உண்ணுவதும் சைகை களாலே செய்கிறார்கள்)

கல் உடைக்கும் பெண் 1 : பாருங்கள். மீண்டும் மீண்டும் அவள் தன் சொந்த கணவனின் வரவுக்காகக் காத்திருக்கிறாள். அவள் கண்க ளில்தான் எவ்வளவு தவிப்பு. அவள் அன்போடு கலந்துவிட்ட தவிப்பைப் போக்க நான் ஒரு பாட்டு கட்டுகிறேன் :

பூத்து நின்ற அழகான பூவே
எந்த காற்றடித்து வாடி நிற்கிறாய் ?
உறக்கம் கெட்டு தன்னந்தனியாக
அவன் வருவான் என காத்திருக்கிறாய்.
எழிலும் இனிமையும் மிக்கவளே
எந்த கனவு காண்கின்றாய் ?
தெளிந்த நிலவு வெளிச்சத்திலே
படரும் கொடிகள் அசைவதையா ?
கடல் பரப்பெங்கும் நாடெங்கும்
பரவிச் சிதறும் நிலவொளியே
சேர்ந்திருக்க உகந்த நேரம்
இதனை தலைவா நீ மறந்தாயோ ?
(பாண்டியராஜன் உண்டு முடிக்கிறான்)

பாண்டியராஜன் : அக்கா உன் கையால பரிமாறின சாப்பாடுதான் எத்தனை ருசி. என் அக்கா

கையால சாப்பிட்ட மாதிரி இருக்கு. இனிமேல் உன் கையால போட்டாதான் சாப்புடுவேன். என்ன சம்மதமா ?

(கோவலன் வருகிறான். கல் உடைக்கும் பெண் 1 பாண்டியராஜனை அழைத்துக் கொண்டு கிளம்பிச் செலகிறாள்)

பாண்டியராஜன் : கொஞ்சம் இரு. அக்கா, என்ன சம்மதமா ?

கண்ணகி : ம்...

பாண்டியராஜன் : இனி நான் அந்தப்புரத்திற்குக் கிளம்புகிறேன். சாரதி, ரதம் தயார் அல்லவா?

கல் உடைக்கும் பெண் 1 : தயாரா இருக்கிறது, பிரபு.

பாண்டியராஜன் : (ரதத்தில் செல்வது போல அபிநயிக்கிறான். அபிநயித்தபடியே மேடையிலிருந்து மறைகிறான். கல் உடைக்கும் பெண் 1ம் மறைகிறாள்)

(பாட்டு)

கோவலன் : கண்ணகி போன காரியம் ஈடேறவில்லை. என் பிறப்பு, பின்னணிக்கு கொஞ்சமும் பொருத்தமே இல்லாத இந்த உடையும், கோலமும் யார்க்கும் நான் யார் எனத் தெரிந்து கொள்ளமுடியாதபடி வஞ்சிக்கின்றன. மாசாத்துவானின் மகன் நானென்று யாரும் நம்பவில்லை.

கண்ணகி : முதலில் உணவுமுடித்து பசியைத் தணித்துக் கொள்ளுங்கள். அதற்கப்புறம் அடுத்த யோசனை.

கோவலன் : பார்த்தாயா, நீ ஞாபகப்படுத்தும் வரைக்கும், தெரியவே இல்லை. எனக்கு தாங்க முடியாத பசி. சீக்கிரமாகப் பரிமாறு

(கண்ணகி உணவைப் பரிமாறுவது போலவும், கோவலன் உணவு உண்பது போலவும் அபிநயிக்கிறார்கள். உணவு உண்ணும் கோவலனுக்கு விசிறியால் விசிறுவதுபோல அபிநயிக்கிறாள் கண்ணகி. கல் உடைக்கும் ஆண் 2 வருகிறான்)

கல் உடைக்கும் ஆண் 2 : அது சரி அவர்கள் இருவரும் ஏன் நன்றாக உட்கார்ந்து சாப்பிடவில்லை. எங்களில் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் எல்லாரும் ஒன்றாகத்தான் உட்கார்ந்து சாப்பிடுவோம். யார் முதலில் யார் கடைசியில் என்ற பேச்சே இல்லை. ஒருவேளை இவர்களின் பழக்கமே இப்படித்தானோ என்னமோ. யாரோ ஒரு புதிய ஆள் சற்று முன்புதான் இவனைத் தேடிக் கொண்டே எங்கெங்கேயோ அலைந்துவிட்டு இந்தப்பக்கமாக வந்தார். இவன் சாப்பிட்டு முடிக்கும்வரை காத்திருக்கும்படி சொல்கிறேன்.

(கல் உடைக்கும் ஆண் 1 மறைகிறான். கையை கழுவிக் கொள்வது போல அபிநயிக்கிறான் கோவலன்)

கோவலன் : இப்படி நிலா வெளிச்சத்தில் சாப்பிட்டு எத்தனையோ வருஷங்கள் உருண்டுவிட்டன. ஒவ்வொரு பௌர்ணமியின் போதும், இப்படி நிலா வெளிச்சத்தோடு சாப்பிடுகிற இந்த கல் உடைப்பவர்கள் எவ்வளவோ அதிர்ஷ்டம் வாய்ந்தவர்கள். கண்ணகி, உனக்கு நினைப்பிருக்கிறதா, புகார் நகரக் கடலின் கரையில்

வெண்மணற் பரப்பில் உன் அழகிய முகத்தை நிலா வெளிச்சத்தில் முதன் முதலாகப் பார்த்தது...ம்...உனக்கும் பசிக்கும் அல்லவா...போய் சாப்பிடு கண்ணகி.

(கண்ணகி சாப்பிடுவது போல அபிநயிக்கிறாள்)

கோவலன் : கண்ணகி, நான் மாதவியோடு இருந்த தப்பை இன்னும் மன்னிக்கவில்லையா? அவளை முழுக்க முழுக்க மறந்துவிட என்னால் ஆனமட்டும் முயற்சி செய்கிறேன். உனக்கும் இது தெரியும். ஆனாலும், உன்னிடம் என் மீதான அக்கறை ஏன் குறைந்து வருகிறது?

கண்ணகி : ஒரு மனைவி என்ற முறையில் என் கடமைகளில் எள்முனை அளவுகூட குறையாமல் கடைப்பிடிக்கிறேன்.

கோவலன் : அப்படியென்றால் அன்பு ?

(மௌனமாக கண்ணகி உணவு உண்ணத் தொடங்குகிறாள். வேறு வழியின்றி அவளையே பார்க்கிறான் கோவலன்)

(கல் உடைக்கும் ஆண் 2 : கௌசிகனை அழைத்துக் கொண்டு வருகிறான்)

கல் உடைக்கும் ஆண் 2 : அதோ, அவர்தான் நீங்கள் தேடிக் கொண்டு வந்திருக்கும் மனிதர். (கல் உடைக்கும் ஆண் : 2 மறைகிறான்)

கௌசிகன் : சமணரான கவுந்தி அடிகளின் வாயில் பொய் வராது. இவனே கோவலன் என்று சொல்கிறார்கள். ஆனால் என் கண்கள் அவன் அவனல்ல என்று என் காதுகளுக்கு எதிராகச்

சாட்சி சொல்கின்றன. இருக்கட்டும். இவனை மகிழ்ச்சிப்படுத்தவென்று மாதவி அடிக்கடி பாடும் பாடலை முணுமுணுத்து இவன் கோவலனே என்று உறுதி செய்து கொள்கிறேன்

"வசந்த காலத்தை விரட்டியடித்து
வந்தது வந்தது கடும் கோடை
உன்றன் பூக்களும் உதிர்ந்து போயின
எங்கே சொல் அந்த இளம் சிரிப்பு"

கோவலன் : (சட்டென எழுந்து நின்று)

நான் மறக்கவேண்டும் என்று நினைத்துக் கொண்டிருக்கும் பாட்டை விரகதாபத்தின் எதிரியாகிய முழுநிலா வெளிச்சத்தில் யார் பாடிக் கொண்டிருக்கிறார்கள்? யார் அந்த கொடுமைக் காரன்?

கௌசிகன் : "மாமரத்தில் இசைத்திருந்த
குயிலெங்கே போனது?
நீர்வற்றிக் குளம் வறண்டது
தாமரை எங்கே பூப்பது?"

கோவலன் : (கண்ணகியிடம்)

யாரோ தெரிந்தவரின் குரல். நீ சாப்பிட்டு முடித்து ஓய்வு எடுத்துக்கொள். இதோ வந்து விட்டேன்.

(பாடிக்கொண்டிருக்கும் கௌசிகனின் குரல் வந்த திசையிலேயே செல்கிறான்.)

கோவலன் : யார் அங்கே பாடுவது? பாழாய்ப் போன அந்த பாட்டை நிறுத்து. அது என் ஞாபகத்தின் அடியில் இருக்கிற எல்லா சேற்றையும் வாரி வாரி என் முகத்தில் அடிக்கிறது.

கௌசிகன் : இந்தப் பாட்டு உன்னைப் பாதிக்கிறது என்றால் நீ கோவலனாகத்தான் இருக்க வேண்டும் இல்லையா?

கோவலன் : உன் குரல் எங்கேயோ கேட்ட மாதிரி இருக்கிறது. இன்னும் பக்கத்தில் வா. வெளிச்சத்தில் முகத்தை நன்றாகக் காட்டு. ஆ! கௌசிகன். கஷ்டக் காலத்தில் வரும் சுப நினைவு போல வந்த தோழனே வா என்னைத் தழுவு.

(இருவரும் தழுவிக் கொள்கின்றனர்)

கோவலன் : இங்கே எப்படி வந்தாய்? உன் வேத அத்யாயனம் முடியும் முன்னாலேயே எதற்காக இத்தனை தூரம் கிளம்பி வந்தாய்?

கௌசிகன் : நட்பென்னும் இனிமை இல்லாத ஊரிலே ஒரு நண்பனால் எப்படி வாழ முடியும்?

கோவலன் : நண்பர்கள் அங்கே இன்னும் இருப்பார்கள் என்கிற நம்பிக்கையில்தான் என்றாவது ஒரு நாள் அங்கே திரும்பி வரவேண்டும் என நினைத்துக் கொண்டிருந்தேன்.

கௌசிகன் : அப்படியென்றால், இப்பொழுதே வா புகாருக்கு.

கோவலன் : இருந்த செல்வத்தையெல்லாம் இழந்த பிறகு இந்த தரித்திர முகத்தை வைத்துக் கொண்டு என் தந்தையாரின் முகத்தில் எப்படி விழிப்பேன்?

கௌசிகன் : உன் தந்தைக்கு உன்னைவிட பெரிய செல்வம் எதுவுமே இல்லை. மாதவிக்கும் அப்படியே.

கோவலன் : ஷ்... மாதவியின் பெயரைக் கேட்டால் போதும், கண்ணகியின் மனம் கலங்கி விடுகிறது. எப்படி இருக்கிறாள் மாதவி? (சாப்பிட்டு முடித்த கண்ணகி கணவனைத் தேடியபடி வருகிறாள்; இருவரும் பேசிக் கொண்டிருப்பதைக் கேட்டுக் கொண்டு மௌனமாக நிற்கிறாள்)

கௌசிகன் : அவள் இப்போது உன் குழந்தைக்குத் தாய். நீ சொன்னபடியே அந்த பெண் குழந்தைக்கு மணிமேகலை என்று பெயரிட்டிருக்கிறாள். அதுமட்டுமல்ல, கடுமையான விரதம், தவம் என நாளுக்கு நாள் தேய்ந்து கொண்டிருக்கிறாள். நீ உயிருடன் இருக்கிறாய் என்கிற நம்பிக்கை அவளுக்கு இல்லை. ஆனால் நான்தான் உன்னைக் கண்டுபிடித்தே தீருவேன் என்று அவளுக்கு வாக்கு கொடுத்துவிட்டு இவ்வளவு தூரம் வந்தேன்.

கோவலன் : ஓ...மாதவி...சொர்க்கம் போன்ற உன் அழகு கிடைத்தாலும் நரகம், கிடைக்காமல் விட்டாலும் நரகம்.

கௌசிகன் : அவள் உனக்கொரு ஓலை கொடுத்திருக்கிறாள்.

கோவலன் : எங்கே கொடு.

(கௌசிகன் ஓலையைக் கொடுக்கிறான்)

கோவலன் : (ஓலையை வாங்கிப் பிரிக்க முனைந்து சட்டென மனம் மாறித் திரும்புகிறான்)

வேண்டாம் கௌசிகா...நான் இதைப் படிக்கவே வேண்டாம். படித்தால் இன்னொரு முறை ஒரு கணவனுக்குரிய கடமையில் இருந்து

பிறழ்ந்து காதல் பித்தேறி விவேகம் இழந்து விடக் கூடும். ஓ...விதியே...கடமை, காதல் என்னும் இரண்டு கைகளாலும் ஏன் என்னைப் பிடித்துக் கிழிக்கிறாய்?

(கண்ணகி தன் இருப்பிடத்துக்குத் திரும்பு கிறாள்)

கோவலன் : போ நண்பா. போ. என் நிலைமையைப் பார்த்தாய் அல்லவா. என் தாய், தந்தையர்க்கு மனம் நோகாமல் எப்படி தெரிவிப்பது என் பதை நீயே தீர்மானித்துக் கொள். என்மேல் நம்பிக்கை வைத்திருப்பவர்கள் நிச்சயம் நான் திரும்பி வருவேன் என்று நம்புமாறு எடுத்துச் சொல்லி அவர்கள் மனசுக்கு நிம்மதி யைக் கொடு.

கௌசிகன் : நீ உயிரோடிருப்பதைப் பார்த்து எனக்கு மீண்டும் உயிர் திரும்பியது. உன் வேதனை என்ன என்று எனக்குத் தெரிகிறது. புகார் நகரம் உனக்குக் கொடுத்த செல்வத்தைப் போல இரண்டு மடங்கு செல்வத்தை இந்த நகரம் உனக்குத் தரட்டும், நீ ஆற்றிய நல் வினைகள் உனக்குத் துணை புரியட்டும். எவ்வளவு விரைவில் முடியுமோ, அவ்வளவு விரைவாக புகார் நகரத்துக்குத் திரும்பிவா.

கோவலன் : இவ்வளவு தொலைவு நீ பட்ட கஷ்டங் களுக்கு என் வந்தனங்கள். புறப்படு நண்பா. இன்னும் கொஞ்ச நேரம் இங்கு நீ இருந்தாலும் கூட பழைய நினைவுகள் மூண்டு என்னைத் தாக்குகின்றன. போ, உன் பயணம் சுக மாகட்டும்.

கௌசிகன் : விரைவாக புகார்க்கு நீ திரும்பி வரும்படி ஆகட்டும்.

(கௌசிகன் சென்று மறைகிறான்)

(உறங்கிக் கொண்டிருக்கும் கண்ணகியின் பக்கம் வருகிறான் கோவலன்)

கோவலன் : கண்ணகி புகார் நகரைச் சேர்ந்த என் பழைய நண்பன் ஒருவன் இந்த வழியாகப் போய்க் கொண்டிருந்தான். நலன் விசாரித்தேன். நீ அமைதியோடு உறங்கு. நாளைக்கு என்ன செய்ய வேண்டும் என்று இப்படியே உட்கார்ந்து கொஞ்ச நேரம் யோசிக்கிறேன்.

(யோசித்தபடியே உட்கார்கிறான்.)

(கல் உடைப்பவர்களின் வருகை)

கல் உடைக்கும் ஆண் 1 : பௌர்ணமி இரவு பாலாகச் சிந்தும் ஒளி......

கல் உடைக்கும் ஆண் 2 : வெந்திருக்கும் மண்ணுடலைத் தடவி வரும் குளிர்க்காற்று .....

கல் உடைக்கும் ஆண் 3 : இப்பக்கம் நாட்டுக்குரிய அணிகலன் எதுவும் இல்லை......

கல் உடைக்கும் ஆண் 2 : அப்பக்கம் காட்டுக்குரிய திகிலும் இல்லை .....

கல் உடைக்கும் ஆண் 1 : இந்த வேளை......

கல் உடைக்கும் ஆண் 2 : இந்த நேரம்......

எல்லோரும் : பொருத்தமானது தலைவன், தலைவியின் சந்திப்பு.

(கல் உடைக்கும் பெண்கள் வருகிறார்கள்)

கல் உடைக்கும் பெண்கள் : பொருத்தமானது தலைவன், தலைவியின் சந்திப்பு.

கல் உடைக்கும் ஆண்கள் :

"பால்ாகப் பொழியும் ஒளியேணி வழியே ராஜ மன்மதா வருக..."

கல் உடைக்கும் பெண்கள் :

"செண்பகம் மல்லிகை மலரம்பு எடுத்து இதயத்தைத் தாக்க வருக..."

(மலர் அம்பைப் பிடித்து நடனமாடியபடி மன்மதன் வருகிறான். கொஞ்ச நேரம் கல் உடைக்கும் ஆண்களும் பெண்களும் நடனமிடத் தொடங்குகிறார்கள். மலர் அம்பை எய்வது போல அபிநயித்தபடி கோவலன், கண்ணகி இருக்கும் இடத்திற்கு வருகிறான் மன்மதன்)

எல்லாரும் :- "மல்லிகைகள் சிந்திய மிருதுவான மண்ணில்

மெல்ல அடிவைத்து வருக!
செண்பகம் மல்லிகை மலரம்பு எடுத்து
இதயத்தைத் தாக்க வருக!"

(கோவலன், கண்ணகி இருவரையும் நோக்கி அம்பு எய்வது போல அபிநயிக்கிறான் மன்மதன். எந்த அசைவும் இல்லாமல் உட்கார்ந்தது உட்கார்ந்தபடி இருக்கிறான் கோவலன்)

கல் உடைக்கும் ஆண் 1 : (சிரித்தபடி) பாவம். அவள் வெட்டிப் போட்ட மரத்துண்டு போல தூங்குகிறாள்.

கல் உடைக்கும் ஆண் 2 : அந்த அளவுக்கு களைத்துப் போய் இருக்கிறாள்.

கல் உடைக்கும் ஆண் 1 : ஆனால் அதற்குள் தன் தோல்வியை ஒத்துக்கொள்வானா அந்த மன்மதன். கவலையோடு எழுந்து உட்கார்ந்த மாதிரி உட்கார்ந்திருக்கிற கோவலனின் முன் வீணாக நடனமாடுகிறான்.

எல்லாரும் : "மனம் என்னும் மரத்தில் அன்பென்னும் பறவைகளை
தட்டி எழுப்பவே வருக
செண்பகம் மல்லிகை மலரம்பு எடுத்து
இதயத்தைத் தாக்க வருக"

கல் உடைக்கும் பெண் 2 : ஆனால் கோவலனின் கண்களுக்கு இந்த பௌர்ணமி இரவு அமாவாசை இருளாக பீதியை நிரப்புகிறது! அங்கே எல்லாமே வேதனை, நிச்சயமின்மை, பச்சாதாபம்.

கல் உடைக்கும் ஆண் 1 : இப்படி கண்ணகியின் ஆழ்ந்த உறக்கத்தின் முன்னிலையிலும், ஆழ்ந்த நினைவுகளில் உறைந்து கிடக்கும் கோவலனின் முன்னிலையிலும் மன்மதனின் லீலைகள் எடுபடவில்லை.

(நிராசையுடன் நடனமாடியபடியே மன்மதன் மறைகிறான்)

கல் உடைக்கும் ஆண் 1 : மன்மதனின் பொழுது போக்கு இல்லாமல் வஞ்சிக்கப்பட்டுள்ளார்கள் இந்த தம்பதிகள்.

கல் உடைக்கும் பெண் 1 : சந்திரனே, இவர்கள் மேல் உன் குளுமையான ஒளியைப் பொழிந்து கொண்டிரு.

கல் உடைக்கும் பெண் 2 : தென்றல் காற்றே, அவர்களைச் சுற்றி சதாகாலமும் வீசிக் கொண்டிரு.

(சிறிது நேரம் மௌனம்)

கல் உடைக்கும் ஆண் 1 : சந்திரனின் முழுமுகம் கொஞ்சம் கொஞ்சமாக மங்குகிறது...

(சேவல் கூவும் சத்தம்)

கல் உடைக்கும் ஆண் 2 : சிவப்புக் குதிரையேறி சூரி யன் வருகிறான் என்ற சங்கதியை கூவித் தெரி விக்கிறது சேவல்.

கல் உடைக்கும் ஆண்கள் : எழுந்திரு கோவலா, நேர மாயிற்று.

கல் உடைக்கும் பெண்கள் : எழுந்திரு கண்ணகி, நேர மாயிற்று.

கல் உடைக்கும் ஆண் 1 : பௌர்ணமி என்னும் மாயத் திரை இறங்குகிறது.

கல் உடைக்கும் ஆண் 2 : சூரியன் எழும்பக் கண்ட உலகம் குதூகலிக்கிறது!

(எல்லாரும் நிதானமாகி லயத்துக்குத் தகுந்தபடி வெளியேறும்போது பின்னணியில் இருந்து மந்திரங்களின் ஓசை...
"நமோ அரிஹந்தாணாம்
நமோ ஸித்தாணாம்
நமோ ஆயாரியாணாம்
நமோ உவஜ்யயாணாம்
நமோ லோயோ ஸவ்வா ஸாஹூணாம்"
கோவலன் திடுக்கிட்டு எழுந்தவுடன் மந்திரங் களின் ஓசை நிற்கிறது)

கோவலன் : ஓ .. என்ன கெட்ட கனவு. திறந்த கண் களின் முன்னாலேயே என்னமோ நடந்த சம்ப வங்கள் போல சரிந்த சித்திரங்கள்! ரத்தச் சிவப்பேறியது போல தோன்றும் அஸ்தமனச் சூரியனை நோக்கி நான் அம்மணமாக நடந்தது போல! திடுமென நெருப்புக்கோளம் கண் களைத் தாக்கியது போல. ஏதோ பாழ் நிலத்தில் மாதவி தன் அழகான தலைக் கூந்தலை மழித் துக் கொண்டது போல. எங்கெங்கும் சூன்யம்.

அந்த சூன்யத்தில் சொர்க்கபுரியின் வெயில் குதிரையின் பார்வை. தொலைவில் இருந்து பார்க்கும்போது மந்தமாகத் தெரிந்த இடத்தில் கண்ணகி யாரோ ஒரு அனாதைக் குழந்தையைச் சமாதானப்படுத்தி தூங்க வைப்பது போல என்னென்னமோ கனவு. நான் சத்தம் போட்டு கூவினேன்:

'எழுந்து வா கண்ணகி, எழுந்து வா'

(கண்ணகி அஞ்சி நடுங்கி எழுந்திருக்கிறாள்)

கோவலன் : வேண்டாம். இவ்வளவு பயங்கரமான கனவுகளை இவளிடம் சொல்லி பய முறுத்துவது சரியில்லை. குலதேவதைகளே! இக்கனவு களால் கலங்கிப் போய் இருக்கிற என் மன வேதனை என்னோடேயே இருக்கட்டும்.

(கண்ணகியிடம்)

கண்ணகி இந்தப் புதிய தினத்தின் வெளிச்சத்தை கண் திறந்து பார். இதமான இளம் வெயிலில் இறுகிப் போய் இருக்கிற எண்ணங்களைக் கரைத்துக் கொள்.

(துள்ளியபடி பாண்டியராஜன் வருகிறான்.)

பாண்டிய ராஜன் : அக்கா, என்னை மாதிரி இருக்கிற ராஜாதி ராஜாக்கள் எல்லாம் இத்தனை நேரம் தூங்கக் கூடாது. ஆனால் இது என் தப்பு இல்ல. உன் தப்பு. உன் கையால சாப்பிட்டப் பறம் என்னைக்கும் இல்லாத அளவுக்கு நல்ல தூக்கம். இப்ப வேலைக்கு நேரமாய்ட்டுது. பொழுது சாயறதுக்குள்ள வந்துடுவேன். இன்னைக்கும் உன் கையாலத்தான் எனக்குச் சாப்பாடு. வாக்குறுதி கொடு.

(கண்ணகி கைதொட்டு வாக்குறுதி தருகிறாள்)

பாண்டியராஜன் : மாமா இதற்கு நீங்கதான் சாட்சி.

கோவலன் : அப்பா, குழந்தை இல்லாத எங்களிடம் ஒரு குழந்தைபோல அன்பு காட்டுகிறாய். இனி மேல் நீ வேலைக்குப் போய் வருவதற்குப் பதில், உன் மேல் இந்த அளவு அன்பாக இருக்கிற இந்த கல் உடைப்பவர்களின் வேலையை ஏன் நீயும் செய்யக் கூடாது?

பாண்டியராஜன் : அது எப்படி நடக்கும் மாமா? அவுங்க எல்லாம் கூலி ஆள்கள். நான் ராஜா. ராஜா என்று சொன்னா, மத்தவங்க வேலை செய்யும் போது சும்மா காலாட்டிக்கிட்டு உக்காந்திருப்பவன். அவன்கிட்ட தொம்பை தொம்பையா காசு கெடந்து பொரளும். அதுக்காகத் தான் நான் அவ்வளவு பணம் சம்பாதிச்சி சேத்து வைக்கணும். அப்படியே பாத்துட்டே இருங்க மாமா, ஒரு நாள் இல்லன்னாலும் இன்னொரு நாள் இந்த மதுரை நாட்டுக்கு எல்லாம் நானே ராஜா. அப்ப உங்களுக்கு இதவிட பெரிய வீடா கட்டித் தருவேன். தங்கத்துல பூட்டுப்போட்டு உங்களயும், அக்காவயும் அங்கேயே பூட்டி வச்சிடுவேன். இப்ப வேலைக்குப் போகணும். நேரமாய்ட்டுது. (பாண்டியராஜன் மறைகிறான்)

கோவலன் : கண்ணகி, ராத்திரி முழுக்க தூக்கம்கூட இல்லாமல் யோசித்தேன். கடைசியில் ஒரு புதிய வழி பிறந்துவிட்டது. உன்னிடம் விலை மதிக்க முடியாத ஒரு ஜோடி கால் சிலம்புகள் உண்டு அல்லவா. அவற்றில் ஒன்றை நீ எனக்குக் கொடுத்தால் அதை விற்று, கிடைக்

கும் பணத்தை முதலீடாக வைத்து புது வியாபாரம் தொடங்குகிறேன். கடன் கேட்க வாயே வரவில்லை. உனக்குச் சம்மதம் தானே?

கண்ணகி : இப்போது, நான், எனது என்று சொல்லிக் கொள்கிற மாதிரி எதுவும் என்னிடம் மிச்சமில்லை. இதோ, எடுத்துக் கொள்ளுங்கள்.

(தன் ஒரு காற்சிலம்பை கோவலனிடம் எடுத்துக் கொடுக்கிறாள்)

கோவலன் : நான் இந்த அளவு தவறுகள் செய்த போதும்கூட உனக்கு என்னிடம் இருக்கிற நம்பிக்கை மயிரிழை அளவுகூட குறையவில்லை. என் வியாபாரம் நிலைத்து, மீண்டும் பழைய நிலைக்குத் திரும்பினால், இதுபோல் பத்து ஜோடி காற்சிலம்புகளைச் செய்து தருகிறேன்.

(கல் உடைக்கும் பெண்கள் வருகிறார்கள்)

கல் உடைக்கும் பெண் 1 : உங்களுடைய இன்றைய தின முயற்சியில் வெற்றி கிடைக்கட்டும். இந்தப் பழங்கஞ்சிதான் எங்கள் காலை உணவு. நாங்கள் வேலைக்குப் போகும் முன்பு, இதைக் குடித்து விடுங்கள்.

(இருவருக்கும் கஞ்சி ஊற்றிக் கொடுக்கிறார்கள்)

(கல் உடைக்கும் ஆண்கள் வருகிறார்கள்)

கல் உடைப்பவர்கள் எல்லாரும் : கல் உடைப்பவங்க—நாங்க
கல் உடைப்பவங்க

கல் உடைக்கும் ஆண் 1 : நாங்கள் இனி வேலைக்குக் கிளம்புகிறோம்.

கல் உடைக்கும் ஆண் 2 : ஏ சூரியனே, உன் வெயில் எங்களைச் சுடாதிருக்கட்டும்.

கல் உடைக்கும் ஆண் 1 : ஏ பாறைகளே, உங்கள் இறுக்கத்தைச் சற்றே தளர்த்திக் கொள்ளுங்கள்.

எல்லாரும் : கல் உடைப்பவங்க-நாங்க
கல் உடைப்பவங்க.

(கல் உடைக்கும் ஆண்-1 ஐத் தவிர மற்றவர்கள் மறைகிறார்கள்)

கல் உடைக்கும் ஆண் 1 : கோவலன் இன்னொரு கனவின் வழியைப் பின்பற்றிப் புறப்படுகிறான்.

(கோவலன் மறைகிறான்)

(கோவலன் திரும்பிவரும் வழியைப் பார்த்தபடி குடிசையின் வாசலிலேயே நின்றிருக்கிறாள் கண்ணகி)

இந்நேரத்திற்குள் கோவலன் நகர்க்குள் சென்று மீனாட்சியம்மையை வணங்கி மலையின் மேலே இருக்கும் முருகனையும் வணங்கி பொற்கொல்லர்கள் வசிக்கும் தெருவை அடைந்திருக்கக் கூடும்.

(கோவலன் வருகிறான்)

(பாட்டு)

"உன் வேட்டைகள் எல்லாம் ஈடேறட்டும்
உன் காலடி மண்ணும் பொன்னாகட்டும்
விதியென்னும் குருடியின் கண் திறக்கட்டும்
திறந்த அக்கண்களில் கருணை பொங்கட்டும்
மேகங்கள் கலைந்து தெளிவாகட்டும்
பயமென்னும் இருள் குலைய ஒளியேறட்டும்."

கோவலன் : அப்பா, இந்த பொற்கொல்லர் தெருவே ஒரு காட்டைப் போல இருக்கிறதே. எங்கும் தங்கம், வெள்ளி, பவழம், நீலமணி, வைரம், கோமேதகம், ஆபரணங்களின் பளபளப்பு இந்தப் பளபளப்போடு போட்டியிடும் கண்ணைக் கூச வைக்கும் வெயில்.

கல் உடைக்கும் ஆண் 1 : ஊரில் இருப்பதையெல்லாம் வேடிக்கைப் பார்த்துக் கொண்டு இருக்கிறானே, இவன் வந்த வேலை என்ன ஆனது?

கோவலன் : அதை நான் மறக்கவில்லை. இந்த காற்சிலம்பினை விலை கொடுத்து வாங்க யாருமே இங்கு அகப்படவில்லை. அவ்வளவு உயர்ந்த விலை மதிப்புள்ளது இச்சிலம்பு.

கல் உடைக்கும் ஆண் 1 :அப்படியென்றால் வேறு வழி?

கோவலன் : நகரத்தில் இருக்கும் மற்ற பொற் கொல்லர்கள் இந்த நாட்டு ராஜாவுக்கு அணிகலன்கள் செய்து தரும் பொற்கொல்லனைப் போய்ப் பார் என்று சொன்னார்கள். அவனைத் தவிர வேறு யாரும் இதனை விலை கொடுத்து வாங்க முடியாது. அவனைத் தேடியே வந்து நின்றிருக்கிறேன்.

கல் உடைக்கும் ஆண் 1 : இங்காவது உன் விருப்பம் நிறைவேறட்டும்.

(கல் உடைக்கும் ஆண்-1 மறைகிறான். பொற்கொல்லன் வருகிறான்)

கோவலன் : ஐயா, பொற்கொல்லரே.

பொற்கொல்லன் : (அவன் பக்கம் திரும்பாமலேயே) கொஞ்சம் இருப்யா. என்னோடேயே நான் கொஞ்சம் பேசவேண்டியதிருக்கிறது.

(தன் கையில் இருக்கும் துணி முடிச்சைப் பிரித்து, உள்ளே இருக்கிற கால்சிலம்பை எடுத்து ..)

இது கிடைக்கணும்ன்னு எத்தனை நாளா தவமிருந்தேன். கண் முழிச்சிருந்தேன். அதனால் எல்லாம் ஒரு நயா பைசாவுக்கு பிரயோஜனம் ஆவல. அப்படின்னா, மகாராணி கால்ல இருக்க வேண்டிய சிலம்பு என் கைக்கு எப்படி வந்தது? ஹ...ஹ...அந்த மகாராணியுடைய வேலைக்காரி இருக்கிறாளே அவள கேளுங்க சொல்வா. மகாராணிக்கு மெதுமெதுவா கால் அமுக்கி அமுக்கி, ஏதோ ஒரு கதைய அவளுக்குக் கொஞ்சம் கொஞ்சமா சொல்லி அவள தூங்க வச்சிட்டு, இந்தச் சிலம்ப கழட்டி எடுத்துக்கிட்டு அரமணி நேரத்துல இங்க பறந்து வந்துட்டா. பாவம். அந்தவேலைக்காரியுடைய அபார புத்திசாலித் தனத்துக்குத் தகுந்த மாதிரி கொஞ்சமாச்சும் அழகும் இருந்திருந்தா அவளுக்கு நான் வாக்குறுதி கொடுத்த மாதிரி அவளயே கல்யாணம் செஞ்சிக்கிட்டாலும் செஞ்சிக்கலாம். ஆனா, அந்தப் பாழாப்போன பிரம்மா அவளுக்கு மோசம் செஞ்சிட்டான். அவ்வளவு புத்தி இருக்கற அவளுக்கு இவ்வளவு அழகுகூட இல்ல. எவ்வளவோ அழகா இருக்கற என் பெண்டாட்டிக்கு இவ்வளவுகூட மூளை இல்ல...

கோவலன் : ஐயா பொற்கொல்லரே.

பொற்கொல்லர் : கொஞ்ச நேரம் சும்மா இருய்யா. அந்த வேலைக்காரி உருவத்தில அதிர்ஷ்ட லட்சுமியே கொண்டு வந்து கொடுத்த இந்த சிலம்பை ஜாக்கிரதையா மறைச்சி வச்சிக் கலன்னா இதுவே என் கழுத்துக்குத் தூக்குக் கயிறாய்டும். இந்நேரத்துக்குச் சிலம்பு காணோம்ங்கற விஷயம் ராணிக்குத் தெரிஞ்சி, அவள் மூலமா ராஜாவுக்குத் தெரிஞ்சி, அவன் மூலமா தளபதிக்குத் தெரிஞ்சி அவன் மூலமா எல்லா வீரர்களுக்கும் தெரிஞ்சி இதுக்காக தேடுதல் வேட்டை ஆரம்பிச்சிருக்கும். கத்தி, ஈட்டி எல்லாம் எடுத்துக்கிட்டு இந்த பொற் கொல்லர் வீதியில அவுங்க வந்து தேட ஆரம் பிக்கும் முன்னாலேயே இத மறச்சி வைக்கணும். என் மேலேயே நம்பிக்கை இல்லாத ஆளாச்சே நானு, இத எங்க மறச்சி வைப்பேன் ?

கோவலன் : ஐயா, பொற்கொல்லரே.

பொற்கொல்லர் : (காற்சிலம்பை மறைத்து வைத்துக் கொள்கிறான்) யாரய்யா நீ. அளகாவதி நகருக்கு வழி தடுமாறி வந்த தரித்திரலட்சுமிக்கு மூத்த மகன் போல இருக்கறியே ? எனக்கு எல்லா நல்ல அதிர்ஷ்டங்களும் கூடி வந்திருக்கும் போது அபசகுனம் மாதிரி வந்து நிக்கறியே. என்ன விஷயம் ?

கோவலன் : நான் உங்களுக்காகக் கொண்டு வந்திருப் பது துரதிர்ஷ்டத்தை அல்ல, அதிர்ஷ்டத்தை. இந்த காற்சிலம்பைப் பாருங்கள்.

(சிலம்பின்மேல் வைத்த பார்வை வாங்காமல் பார்த்துக்கொண்டிருக்கிறான் பொற்கொல்லன்)

கோவலன் : இந்தச் சிலம்புக்குத் தகுந்த விலையைக் கொடுத்து வாங்கக்கூடிய சக்தி உங்கள் ஒருவர்க்குத்தான் உண்டு என்று இந்த ஊரே சொல்கிறது. விலை மதிப்பற்ற இந்த ஆபரணத்தை விற்கக்கூடிய சூழ்நிலைக்கு என்னை ஆளாக்கி விட்டது தெய்வம். இதற்குத் தகுந்த விலையைக் குறித்து, வாங்கிக்கொண்டு எனக்கு உதவி செய்யவேண்டும்.

பொற்கொல்லன் : இங்க கொடு, இங்க கொடு. பார்க்கலாம், போலியானது இல்லைதானே.

கோவலன் : இந்தத் தொழிலிலேயே நித்தமும் வாழ்கிற நீங்களே சோதித்துப் பார்த்துக் கொள்ளுங்கள்.

பொற்கொல்லன் : இங்கேயே இரு. இதோ வந்துட்டேன்.

(பொற்கொல்லன் இன்னொரு திசைக்கு வருகிறான். மறைத்து வைத்த சிலம்பை வெளியே எடுத்து இரண்டு கைகளிலும் இரண்டையும் வைத்து ஒப்பிட்டுப் பார்க்கிறான்)

பொற்கொல்லன் : அப்பொழுது அரண்மனை வேலைக்காரி உருவத்தில அதிர்ஷ்ட தேவதை வந்தாள்ன்னா, இப்பொழுது இந்த தரித்திரம் புடிச்சவன் உருவத்துலயும் அவளே வந்திருக்கா. கனவுலகூட என்ன பாடா படுத்திட்டிருந்ததே, அந்த கால்சிலம்பின் உண்மையான வடிவம் இதுவா, இந்த கால்சிலம்பின் உண்மையான வடிவம் அதுவா, நீங்களே சொல்லுங்க பாக்கலாம். எல்லாம் தெரிஞ்ச என் கண்ணுக்கே ஒரே குழப்பமா இருக்குது. உங்களுக்கு எங்கே தெரியப் போவுது. அப்படியே பாத்திட்டிருங்க. என்னுடைய எல்லா பிரச்சனை

களுக்கும் பரிகாரம் இந்த கதியில்லாதவன் கிட்டத்தான் இருக்குதுன்னா நம்பறீங்களா? பாத்துட்டே இருங்க.

(ராணியின் காற்சிலம்பை மறைத்து வைக்கிறான்)

பொற்கொல்லன் : அப்பா, நீ ரொம்ப புண்ணியம் செஞ்சவன். இந்த மாதிரி விலைகட்ட முடியாத ஆபரணம் உனக்குக் கிடைச்சிருக்குதுன்னா, உன்தாத்தா, கொள்ளுத் தாத்தாவெல்லாம் என்ன தவம் செஞ்சாங்களோ. இப்படிப் பட்ட இந்தச் சிலம்பை நீ விக்கறதுக்காக வந்திருக்கியே உண்மையிலேயே உனக்கு வரக் கூடாத கஷ்டம்தான் வந்திருக்கணும். உனக்குக் கண்டிப்பா உதவி செய்யணும்ன்னு என் உள் மனசு அடிச்சிக்குது.

கோவலன் : எந்த விலைக்கு நீங்க இதை வாங்க முடியும்?

பொற்கொல்லன் : உண்மையைச் சொல்லணும்ன்னா இதை விலை கொடுத்து வாங்கும் சக்தி எனக்கும் இல்லைன்னுதான் சொல்லணும். சாட்சாத் மகாராஜா மட்டும்தான் இதை விலைகொடுத்து வாங்க சக்தியுள்ளவர்.

கோவலன் : எனக்கு உடனடியா பணம் வேணும்.

பொற்கொல்லன் : புரியுது. எனக்கும் மகாராஜாகிட்ட ஒரு அவசர வேலை இருக்குது. இந்த மாதிரி ஒரு சிலம்புதான் வேணும்ன்னு மகாராணி காலையிலிருந்து உட்கார்த்திருக்காங்களாம். இந்தா, இந்தச் சிலம்ப வச்சிக்க. ஜாக்கிரதை.

நான் இப்படி போய் அப்படி வந்துடறேன் மகாராஜா ஆளுங்களோட சீக்கிரம் வரேன்.

கோவலன் : விரைவாகச் சென்று வாருங்கள். அங்கே எதிரில் இருக்கிற கோயில் வாசலில் பிரார்த்தனை செய்தபடி இருக்கிறேன்.

பொற்கொல்லன் : ரொம்ப நல்லது. அது தனலட்சுமி கோயில். உனக்கு அவள் நிச்சயமா நல்லது செய்வா. இன்னும் அரைமணி நேரத்துல வந்துடு வேன்.

(கோயிலின் முன்புமண்டியிட்டு உட்கார்கிறான் கோவலன். கல் உடைக்கும் ஆண்-1 வரு கிறான்)

கல் உடைக்கும் ஆண் 1 : இப்படியாக கோவலன் அந்த தேவதையின் கோயிலின் முன்பு உட் கார்ந்து பிரார்த்தனை செய்கிறான். அந்த பொற்கொல்லன் இதோ வந்து விடுவான். அதோ வந்துவிடுவான், என் துன்பப் படலம் முடிந்து சுகப்படலம் இதோ ஆரம்பிக்கப் போகிறது என்று அங்கே உட்கார்ந்திருக்கிறான். அங்கே பொற்கொல்லன் படைவீரர்களை எதற்காக அழைத்து வருகிறான்?

(கல் உடைப்பவன் மறைகிறான்)

(பொற்கொல்லன், இரண்டு படைவீரர்கள் வருகிறார்கள்)

பொற்கொல்லன் : மகாராணி காலிலிருந்த சிலம்ப பாத்திருக்கீங்க, இல்லையா? நான் சொல்றேன். அது அந்த திருடன்கிட்ட இருக்குது. போய் தேடிப் பாருங்க. மகாராஜா கட்டளை ரொம்ப

தெளிவா இருக்குது. யார் கையில அந்த சிலம்பு இருக்குதோ, அவனுடைய தலை அடுத்த நிமிஷமே தனியா துண்டாகிக் கீழ விழுணும். இல்லன்னு சொன்னா, அந்த தண்டனையை உங்களுக்கு வாங்கிக் கொடுக்கறது என்னுடைய கடமை. சீக்கிரம் போங்க, அந்த திருடன் எங்க யாவது ஓடிடப் போறான்.

படைவீரன் 1: நீங்க ரெண்டு பேரும் இங்கேயே இருங்க. நான் முதலில் போய் சோதித்துப் பாக்கறேன்.

(படைவீரன்-1 கோவலன் அருகே வருகிறான்)

படைவீரன் 1: ஐயா, உன்னிடம் இருக்கும் கால் சிலம்பைச் சோதித்துப் பார்த்துவிட்டு வா என்று மதுரை அரசர் கட்டளை போட்டிருக்கிறார். இதோ ராஜமுத்திரை.

(கோவலன் கால் சிலம்பை எடுத்து நீட்டுகிறான். படைவீரன்-1 அதைப் பார்த்து விட்டு ஒரு கணம் உறைந்து கோவலனின் முகத்தை உற்றுப் பார்த்துவிட்டு மீண்டும் திரும்புகிறான்)

படைவீரன் 1: இது உன்னிடமே இருக்கட்டும். இதோ பொற்கொல்லன் வந்துவிடுவார்.

(மீண்டும் கோவலன் மண்டியிட்டு பிரார்த்தனை செய்யத் தொடங்குகிறான்.)

பொற்கொல்லன்: எப்படியோ, என் வார்த்தையை நிருபிச்சிட்டேன்.

படைவீரன் 1: அந்தச் சிலம்பு பார்ப்பதற்கு மகாராணி யுடைய காற்சிலம்பு போலவே இருக்கிறது

என்பது என்னமோ நிஜம்தான். ஆனால், அவனுடைய முகத்தில் திருடனுக்குரிய எந்த அடையாளமும் இல்லை.

பொற்கொல்லன் : டேய் முட்டாள். உன்னை மாதிரியான ஆளுங்க படைவீரனா இருக்க தகுதியில்லை. போய் எதாவது சாமியாராகலாம். கையும் களவுமாக ஆளப் புடிச்சிக் கொடுத்திருக்கேன். வெட்ட வெளிச்சத்தில எதார்த்தமா கண்ணுக்கு தெரியறத நம்பாம, கண்ணுக்குத் தெரியாம இருக்கற அவனுடைய மனச எப்படிய்யா நீ நம்பறே!

படைவீரன் 1 : அவன் திருடனாக இருப்பதற்குச் சாத்தியமில்லை என்று என் உள்மனம் சொல்கிறது. பார்ப்பதற்கு ரொம்ப மிருதுவான சுபாவம் உடையவனாய்த் தெரிகிற இவன் போய் மகாராணியின் அந்தப்புரத்திற்குள் நுழைந்து போனான்னு சொன்னா அதை கற்பனைகூட செய்து பார்க்க முடியவில்லை.

பொற்கொல்லன் : (தனக்குள்) இந்த கழுதப் பசங்களுக்கு அந்த முண்டத்த பாத்து ஐயோ பாவம்ன்னு தோணுதே தவிர, என்னப் பாத்து ஐயோன்னு தோணலையே. என் தோளிலே தலை நிக்கணும்ன்னா, அவன் தோளிலேருந்து தலை கீழே விழுந்து உருளணும். இப்ப என்ன செய்யலாம்? (வெளிப்படையாக) இங்க பாருங்கப்பா, இந்தக் காலத்துல திருடனுங்க கத்து வச்சிருக்கற வித்தைங்களைப் பத்தி உங்களுக்கு எதுவும் தெரியாது. நம்ம வீரர்ங்க ரொம்ப சுறுசுறுப்பா சாமர்த்தியமா இருக்கறாங்கன்னு தெரிஞ்சிகிட்டு, அவுங்க கண்ணில மண்ணு

தூவறதுக்காக கண்கட்டு வித்தையையெல்லாம் திருட்டுத் தொழில்ல பயன்படுத்தறாங்களாம். அன்னைக்கி ஒரு நாள் இதே கடையில வியாபாரம் செஞ்சபடி உட்கார்ந்திருந்தேன். ஒரு சாமியார் வந்து 'ஐயா, பிச்சை'ன்னு கேட்டான். 'அடுத்த இடம் பாரு'ன்னு சொன்னேன். அப்புறம் பார்த்தா, திடீர்னு அஞ்சாறு நகைங்க, இருந்த இடத்தில இல்ல. மாயமா மறைஞ்சிட்டுதுன்னு தெரிஞ்சிது. அப்புறம் அவன புடிச்சி அடிச்சா, எல்லாம் புரிஞ்சிது. அவன் பையில ஏதோ மந்தரித்து வைத்த வேர். அந்த மாதிரி ஒரு வேர் இருந்திச்சின்னா எந்தெந்த நகைங்க வேணும்ன்னு நெனைக்கறமோ, அந்தந்த நகைங்க தானாவே வந்து பைல சேந்துக்குமாம். போனா போவுது, காவித்துணி கட்டியிருக்கறானேன்னு சும்மா விட்டுட்டோம். ஆனா, இந்தத் திருடன் திருடி இருக்கிறது மகாராணியுடைய நகையை. நீங்க அவன் தலையை வெட்டாம போனா, நேரா ராஜாகிட்ட போய் விஷயத்தைச் சொல்லி உங்க தலைய வெட்டச் செஞ்சிடுவேன். நல்லா யோசன செஞ்சிபாருங்க. ஆயிரம் வராகன் பரிசு யாருக்கு கொடுத்து வச்சிருக்குமோ?

(படைவீரன் 1 படைவீரன் 2 இருக்கும் பக்கம் வருகிறான்)

படைவீரன் 1 : என்னதான் சொன்னாலும் என் மனம் ஒத்துக்கொள்ள மறுக்கிறது. அப்படிப் பார்த்தால்கூட மந்திரவாதிக்குரிய முகலட்சணம் இருப்பது இந்த பொற்கொல்லனுக்குத்தானே தவிர அந்த ஆளுக்கல்ல.

படைவீரன் 2 : ஆயிரம் வராகன்! அதுமட்டும் எனக்குக் கிடைச்சுவிட்டால் இந்த வேலையையே விட்டு விட்டு ஏதாவது வியாபாரம் செய்யலாம்.

(பொற்கொல்லனிடம்)

உங்க வார்த்தையிலும் ஒரு அர்த்தம் இருக்குது பொற்கொல்லரே. இதே போல ஒரு ஆளு எங்க ஊரில குறி சொல்வதற்காக வருவான். அவன் வந்துட்டான்னா போதும். பொண்ணுங்களும் கழுத்துல இருக்கிற தாலி, சங்கிலி எல்லாவற்றையும் தானே கழற்றி அவன் பையிலே போட்டுருவாங்க. இந்த சங்கதிய தெரிஞ்சிக் கறதுக்கு எங்களுக்கு ரொம்ப நாளாயிடுச்சி.

(படைவீரன்- 1 ஐ நோக்கி)

இங்க பாருப்பா நீ வந்தா வா. வரலைன்னா போ. ராஜா என்ன கட்டளை போட்டாரோ. அதை நிறைவேற்றுவது என்னுடைய கடமை

(கோவலனை நோக்கி நடக்கிறான்.)

அந்த குறி சொல்ற ஆளு ஒரு நாள் அடுத்த ஊர்ல வசமா மாட்டிக்கிட்டான். ஏதோ குளத்துப் பக்கம் அவன் தண்ணீர் குடிச்சிட்டிருந்தப்போ அவன் குடுமி எனக்குத் தெரிஞ்சிது. (உறையில் இருந்து வாளை உருவி எடுத்து) அப்பொழுது இதே போல வாளை உருவி எடுத்து ஒரே வெட்டுல அவன் கழுத்த இதே போல வெட்டி...

(கோவலனின் கழுத்தை வாளால் வெட்டுகிறான் மேடையில் இருள் சூழ்கிறது. பொற்கொல்லன் மேல் மட்டும் வெளிச்சம் படர்கிறது.)

பொற்கொல்லன் : என்னுடைய எல்லா பிரச்சினைக்கும் முடிவு இந்த கதியில்லாதவன்கிட்டதான் இருந்ததுன்னு இப்பவாச்சும் நம்பறீங்களா. இப்ப ராணியுடைய சிலம்பு காணாம போய் மறுபடியும் கிடைச்சிட்டுது. மூளை இல்லாத இந்த ரெண்டு படைவீரர்களுக்கும் தலைக்கு ஆயிரம் ஆயிரம் வராகன் பரிசு. எனக்குப் பரிசு ஏற்கனவே கிடைச்சாச்சு. மகாராணிக்கு எந்த நஷ்டமும் இல்லை. எல்லாத்துக்கும் நடுவுல, இந்த பாவப்பட்ட ஜென்மத்துக்கும் எல்லா கஷ்டங்களிலேருந்தும் பெரிய விடுதலை. எல்லாத்தையும் கூட்டிக் கழிச்சி கணக்குப் பாருங்க. மொத்தத்தில லாபம் அதிகமா, நஷ்டம் அதிகமா சொல்லுங்க பார்க்கலாம்?

(பொற்கொல்லன் மறைகிறான். கண்ணகி வருகிறாள். கல் உடைப்பவன் : 1 வருகிறான். கோவலனுக்காக கண்ணகி காத்திருக்கிறாள். கல் உடைக்கும் சப்தம்)

கல் உடைக்கும் பெண் 1 : இன்னொரு மாலை முடிகிறது. கண்ணகி மீண்டும் தன் கணவன் திரும்பி வரும் வழியை நோக்கிப் பார்த்துக் கொண்டு இருக்கிறாள். அவள் மனச்சுமையை அகற்றும் வகையில் மீண்டும் அதே பாட்டை பாடுகிறேன்.

"பூத்து நின்ற அழகான பூவே
எந்த காற்றடித்து வாடி நிற்கிறாய்?
உறக்கம் கெட்டு தன்னந்தனியாக
அவன் வருவான் என காத்திருக்கிறாய்?
எழிலும் இனிமையும் மிக்கவளே,
எந்த கனவு காண்கின்றாய்?

தெளிந்த நிலவு வெளிச்சத்திலே
படரும் கொடிகள் அசைவதையா?
கடல் பரப்பெங்கும் நாடெங்கும்
பரவிச் சிதறும் நிலவொளியே
சேர்ந்திருக்க உகந்த நேரம்
இதனை, தலைவா, நீ மறந்தாயோ?"

(கடைசி வரிகளை கேட்டுக் கொண்டிருக்கும் போதே கோவலனின் இறந்த உடலின் மேல் வெளிச்சம் படர்கிறது சுற்றியும் மக்கள் கூட்டம்)

மனிதன் 1 : சே ..சே ..... இப்படிப்பட்ட ஆளு அப்படிப்பட்ட சிலம்பைத் திருடுனான்னு சொன்னா நம்பவே முடியலை.

மனிதன் 2 : எனக்கு என்ன தோணுதுன்னா, வேற யாரோ திருடிட்டு இவன் தலையில அந்த பழிய போட்டிருப்பாங்கன்னு நெனைக்கறேன் (மீண்டும் குசுகுசு என்று பேசிக் கொள்கிறார்கள்.) பாண்டியராஜன் உள்ளே நுழைந்து கும்பலில் இருக்கிறவர்களின் பைகளில் உள்ள பணப்பையை மெல்ல மெல்ல எடுத்து தன்னுடைய பைக்குள் போட்டுக் கொண்டபடி உள்ளே வருகிறான். கோவலனின் பிணத்தைப் பார்த்ததுமே 'ஐயோ, மாமா' என்று அலறுகிறான். கும்பலில் இருந்து வேகமாக ஓடியபடி வெளியேறுகிறான்.)

மனிதன் 1 : என் பணப்பைய காணமே?

மனிதன் 2 : என் பை எங்கே போச்சு?

எல்லாரும் : அதோ திருடன் .. புடிங்க... புடிங்க
(எல்லாரும் மறைகிறார்கள்)
(கல் உடைக்கிறவர்கள் வருகிறார்கள்.)

கல் உடைக்கும் பெண் 1: பாவம். தன் விழியிரண்டையும் வழிமேல் வைத்து அவள் காத்திருக்கிறாள் வாருங்கள். அவள் அலுப்பு நீங்கும் வகையில் ஒரு கதைப்பாட்டு பாடிக் காட்டலாம்.

கல் உடைக்கும் பெண் 2: எந்த கதையை ?

கல் உடைக்கும் ஆண் 1: மதுரையின் முதல் கடவுளான மீனாட்சியின் கதையை நம் பாட்டிலும், தாளத்திலும் அவளை மூழ்க வைத்து அலுப்பை நீக்கலாம்.

(கல் உடைக்கும் பெண்ணிடம்)

போய் அவளை அழைத்துக் கொண்டு வா.

(கல் உடைக்கும் ஆண்-2 டம்)

நீ கதையைத் தொடங்கு.

(கல் உடைக்கும் பெண் 1, பாடல் தொடங்கிய கொஞ்ச நேரத்துக்குள் கண்ணகியை அழைத்து வந்து உட்கார வைக்கிறாள்)

''மதுரையில் இருந்து நாட்டை ஆண்டவன்
மலையத்துவ ராசன்
வானம் பூமி பாதாளம் எங்கும்
ஈடிணையற்ற ராசன்
பாலும் தேனும் ஆறாகப் பாயும்
அவனது நாட்டுக்குள்ளே
மழையும் பொய்க்காது விளைச்சலும் தப்பாது
அவனது நாட்டுக்குள்ளே
அளகாவதியோ அமராவதியோ
சொர்க்கமே அவனது நாடுதான்
பாராட்டுபவர்கள் பாட்டெடுப்பார்கள்
கவிஞர்களும் அந்த நாட்டிலே''

கல் உடைக்கும் பெண்கள் :

"அங்கே நதிகள் எல்லாம் நிரம்பி ஓடுகின்றன
ஏரிகள், குளங்கள் எல்லாம் நிறைந்திருக்கின்றன
அரசாங்கக் கருவூலமும் நிறைந்திருக்கிறது
மக்கள் மனமும் மகிழ்ச்சியால் நிரம்பி இருக்கிறது
என்னதான் நிறைவிருந்தாலும்—
"அந்த ராணியின் வயிறோ திறக்கவே இல்லை
அவளுடைய கண்ணீரோ நிற்கவே இல்லை
அவர்கள் குலமென்னும் மரம் தழைக்க தளிரே இல்லை
ஆதலால் அவர்களுக்கு ஆனந்தம் இல்லை"

கல் உடைக்கும் ஆண் 1 : அந்த தம்பதிகள் வண்டி வண்டியாக பிராமணர்களுக்கு அன்னதானமும், பொருள் தானமும் கொடுத்தார்கள். பசுக்களையும், நிலத்தையும்கூட தானமாகக் கொடுத்தார்கள். ஐம்பத்தாறு தேசங்களிலும் இருக்கும் தெய்வங்களுக்கு எல்லாம் சந்தன அர்ச்சனை, பூ அர்ச்சனை, குங்கும அர்ச்சனை பாலாபிஷேகம், தேனாபிஷேகம், மகாமஸ்தகாபிஷேகம் எல்லாவற்றையும் மிகவும் பயபக்தியோடு செய்தாலும்கூட ராணி கர்ப்பவதி ஆகவில்லை. அப்போது ராணி காஞ்சனமாலை தனது கணவன் மலையத்துவஜனிடம் சொல்கிறாள் —

கல் உடைக்கும் பெண்கள் : (பாட்டு)

"இது எந்த ஜென்மத்தின் பாவமோ-
இது எந்த முனிவனின் சாபமோ-
இது எந்த கடவுளின் கோபமோ-
மலடியானேன் நான்.

நிந்திக்கும் வார்த்தையை தாங்கமுடியவில்லை
அவதூறுப் பேச்சையோ கேட்க முடியவில்லை
வேதனையின் பிடியிலிருந்து மீட்சியே இல்லை
உயிரோடு இருக்கவே மனம் ஒப்பவில்லை"

கல் உடைக்கும் ஆண் 1 :

''என் உயிருக்கு உயிரானவளே! மணம் இல்லாத பிறகு பூ இருந்து என்ன பயன்? குயில் களின் பாட்டு இல்லாமல் வசந்தகாலம் இருந்தும் என்ன பயன் ? என் அன்புக்குரிய காஞ்சன மாலையே, நீ போனபின்பு நான் மட்டும் இருந்து என்ன பயன்?''

கல் உடைக்கும் பெண் 1 : ''அமைதி. அமைதி. என் அன்புக்குரியவரே புண்ணியவதியாய் இருக்கும் இன்னொரு பெண்ணைத் தேடி நீங்கள் மணம் செய்து கொள்ளும் பட்சத்தில் கண்மணியான குழந்தை பிறக்கும். உங்கள் வம்சத்தைக் களங்கப்படுத்தவென்றே வந்து சேர்ந்த பாதகி யான நான் உயிரை மாய்த்துக் கொள்கிறேன்.''

கல் உடைக்கும் ஆண் 1: ''மனைவியின் அன்புக்கு மதிப்புத் தந்து அவளோடேயே என் வாழ்வை நீட்டித்துக் கொள்வதா ? இந்த நாட்டுக்கு என் வாரிசாக ஒருவன் வேண்டுமே என்பதன் பொருட்டு திருமணம் செய்து கொண்டு தந்தை யாகட்டுமா?'' என்று அந்த மலையத்துவச ராசன் ஆலோசனை செய்துகொண்டிருக்கும் போது நாரதர் ஆகாய மார்க்கமாக வருகிறார்.

கல் உடைக்கும் ஆண் 2 : ''நாராயண ஹரி நாராயண கோவிந்த கோவிந்த ஹரி கோவிந்த''

கல் உடைக்கும் ஆண் 1 : இப்படிப் பாடிக்கொண்டே வந்த அந்த நாரதர், அந்த தம்பதிகளிடம் சொல்கிறார்.

கல் உடைக்கும் ஆண் 2 : அப்பா மலையத்துவசா, அம்மா காஞ்சனமாலை உங்களுக்கு உண்டாக இருக்கும் அதிர்ஷ்டத்தை எப்படிச் சொல்வேன்? அம்மா தாயே உன் வயிற்றில் தெய்வ சக்தி யொன்று பிறக்க இருக்கிறது என்று பிரம்மா எழுதிய வாசகத்தை இப்போதுதானே உன் ஜாதகத்தில் படித்துவிட்டு வந்தேன்.

கல் உடைக்கும் பெண் 1 : முனிவரே அப்படியென்றால் நான் ஏன் இப்படி மலடியாக இருக்க வேண்டும்?

கல் உடைக்கும் ஆண் 2 : அம்மா காஞ்சனமாலை, மும்மூர்த்திகளானாலும் சரி, முப்பத்து முக்கோடி தேவர்களானாலும் சரி, யாராய் இருந்தாலும் கர்மபலனை அனுபவித்துத்தான் ஆக வேண்டும். இது போன ஜென்மத்துப் பலன். இப்போது நீங்கள் இருவரும் ஒரே எண்ணம் உடையவர்களாக புத்ரகாமிஷ்டயாகம் செய்தால், உங்கள் வம்சத்தில் தெய்வக்குழந்தை யொன்று பிறக்கும்.

கல் உடைக்கும் ஆண் 1 : இப்படிச் சொல்லிவிட்டு நாரத முனிவர் ஆகாய மார்க்கமாக வைகுண்டத் திற்குத் திரும்பிச் சென்றுவிட்டார்.

கல் உடைக்கும் ஆண் 2 : அவர் சொன்னபடியே மலையத்துவசனும், காஞ்சனமாலையும் சேர்ந்து புத்ரகாமிஷ்டயாகத்தைச் செய்கிறார்கள். சப்த ரிஷிகளுக்கும், அஷ்டதிக்கு பாலகர்களுக்கும்,

தேவர்களுக்கும் அழைப்பு அனுப்பி வரவழைத்து இந்த மதுரையையே யாகசாலையாக்கி யாகம் செய்கிறார்கள். அந்த யாககுண்டத்தில் இருந்து எழும் ஜ்வாலைகள் – (பாட்டு)

கல் உடைக்கும் பெண் 1 :

"தகதகதகவென்று எழுந்து
உலகெங்கும் பரவ
படபடபடவென்று எழுந்த
பொறிகளெங்கும் பரவ
தளதளதளவென்று மின்னி
ஒளியெங்கும் பரவ
அமராவதியையே தொட்டது
கைலாயம் வைகுண்டம் எங்கும் நிறைந்தது."

கல் உடைக்கும் ஆண் 1 : இப்படியாக யாகத்தில் இருந்து எழுந்த ஜூவாலை பூமி, ஆகாயம் எங்கும் பரவிவிட, காஞ்சனமாலையும், மலையத்துவசனும் அந்த ஜூவாலையையே பார்த்துக் கொண்டிருக்க–

கல் உடைக்கும் ஆண் 2 : (பாட்டு)

"நெருப்பாய் குழந்தையொன்று பிறந்ததம்மா.
புகைபோல் நிறத்தைக் கொண்டதம்மா
கருஞ்சூரியன்போல் பொலிவம்மா
சந்திர ஒளிபோல் மினுமினுப்போ"

(பாண்டியராஜன் ஓடோடி வருகிறான். ஓடிச் சென்று கண்ணகியின் காதில் குசுகுசுவென்று ஏதோ சொல்கிறான்)

கல் உடைப்பவன் 1 : இந்த உலகத்தில் இருக்கிற பெண்களுக்கு எல்லாம் இரண்டு ஸ்தனங்கள்

என்றால், இந்த விசித்திர பெண் குழந்தைக்கு மூன்று. இது என்ன விசித்திரம் என்று தம்பதி கள் இருவரும் புரோகிதரைப் பார்த்துக் கேட்ட போது–

(கண்ணகி திடீரென வேகமாக அலறுகிறாள். சட்டென எழுந்து ஓடி மறைகிறாள்.)

கல் உடைப்பவன் 2 : என்ன ஆயிற்று? புண்ணிய கதையைச் சொல்லிக்கொண்டிருக்கும் போதே ஏதோ விபரீதம் நடந்திருப்பது போலத் தெரிகிறது.

பாண்டியராஜன் : அக்கா, நானும் வருகிறேன்.

கல் உடைப்பவன் 2 : என்ன நடந்தது, சொல்.

பாண்டியராஜன் : மாமாவின் கொலை.

(பாண்டியராஜன் ஓடி விடுகிறான்)

கல் உடைக்கும் ஆண் 1 : சூரியன் மறைந்து, பொழுது சாயும் வேளையில் கணவன் கொலையான செய்தி கண்ணகிக்குத் தெரியவந்தது இப்படித் தான்.

கல் உடைக்கும் பெண் 1 : மென்மையான பேச்சை யுடைய அவள் கோபமுடன் ஒரு பெண்சிங்கம் போல வெகுண்டெழுந்தாள். நகரை நோக்கி அவள் நடந்தபோது தரை நடுங்கியது. கரு மேகம் போல் அடர்ந்த அவள் கூந்தல் அவிழ்ந்து புரள, கண்களில் இருந்து நெருப்புப் பொறி பறக்க, குறுக்கில் வந்த படைவீரர் கள் நடுங்கி ஓடுமாறு நடந்தாள். அரண்

மனையின் முன்னால் துருபிடித்துக் கிடந்த ஆராய்ச்சி மணியைச் செவிடர்களுக்கும் கேட்கிறமாதிரி அதோ அடித்துக் கொண்டிருக்கிறாள்.

(ஆராய்ச்சிமணியின் சத்தம் கேட்கத் தொடங்கியதுமே கல் உடைப்பவர்களும் ஒரு மூலையில் பார்வையாளர்கள்போல நிற்கிறார்கள்)

கல் உடைக்கும் ஆண் 2 : இங்கே பாருங்கள். எரிமலையில் இருந்து விசிறியடிக்கப்பட்ட துண்டு போல வெகு வேகமாக அரசன் பயத்துடன் வந்து கொண்டிருக்கிறான்.

(மதுரை அரசன் வருகிறான்)

(பாட்டு)

"டணக்கு டணக்கு டண்டணென ஒலிக்கிறதே
ஆராய்ச்சி மணி
தடதடதடதட தடவென நிலம் அதிர்கிறதே
பிரளயம் ஏதேனும் மூண்டதா?
அடடா அடடா இது என்ன கஷ்டம்
யார் இதனை தீர்ப்பதுவோ?
கடகடகடகட கடவென நிலம் நடுங்குதே
பிரளயம் ஏதேனும் மூண்டதோ?"

மதுரை அரசன் : யாராவது அந்த மணிச் சத்தத்தை நிறுத்துங்களேன். அமைதிக்கும் சமாதானத்துக்கும் தாய்வீடாக இருந்த இந்த நகரத்திலே ஏதோ கடும் யுத்த அபாயத்தை உருவாக்குவது போல மணியடிப்பது யார்?

(காவலர்கள் வருகிறார்கள்)

காவல்காரன் : வாழ்க வாழ்க, மதுரை அரசர் நெடுங்காலம் வாழ்க! அந்த ஆராய்ச்சிமணியில்

உறங்கிக்கிடந்த மணியின் நாக்குகளைத் தட்டி ஆத்திரத்துடன் ஓசை உண்டாக்குவது ஒரு அபலைப்பெண். அவள் கண்களில் துன்பத்தால் பொங்கிய கண்ணீர் வழிந்தோடினாலும்கூட, அவள் கண்கள் வெடிக்கக் காத்திருக்கும் எரிமலை போல உள்ளது. அவள் துர்க்கையைப் போல இருப்பது நிறமே என்றாலும், அவள் கைகளில் திரிசூலம் எதுவும் ஏந்தி இருக்கவில்லை. நீங்கள் பூசித்து வணங்கும் வெற்றித் தேவதையான கொற்றவை போல இருந்தாலும், அவள் கையில் ஈட்டி இல்லை. அவள் அருகே செல்வதற்கே எல்லா காவலர்களும் நடுங்கி ஓடி மறைந்த தருணத்தில், நானே தைரியமாக அவள் பக்கத்தில் சென்று, அவளைத் தங்களிடம் அழைத்து வந்திருக்கிறேன்.

(ஒரு கையில் கோவலனின் வெட்டுண்ட தலையோடு கண்ணகி வருகிறாள்)

மதுரை அரசன் : சுடுகாட்டுக்கு எடுத்துச் செல்ல வேண்டிய ஒன்றை மங்களகரமான அரண்மனைக்குள் எடுத்து வந்த காரணம் என்ன? சுய நினைவோடு இருந்தால், அந்த காரணத்தைச் சொல்.

கண்ணகி : சாட்சி, ஆதாரம் எதுவும் இல்லாமல் எந்த தவறும் இழைக்காத ஒருவனைக் கொன்று ரத்தம் குடிக்கிற கொலையாளிகளின் ராஜாதிராஜனே, என் கணவனின் உயிரை மீண்டும் திருப்பிக் கொடு.

மதுரை அரசன் : இறந்தவர்களுக்கு உயிரை மீண்டும் திருப்பித் தரும் சக்தி அந்த மும்மூர்த்திகளுக்கு மட்டும்தான் உண்டு. உன் கணவன் சாகக் காரணம் எனன?

கண்ணகி : கொல்லச் சொன்ன உனக்கு, கொல்லச் சொன்னதான் காரணமும் தெரிந்திருக்க வேண்டுமே சொல். என் கணவனின் சாவுக்கு என்ன காரணம்?

காவல்காரன் : மன்னா, மகாராணியின் காற்சிலம்பைத் திருடிய காரணத்தால் இவளுடைய கணவன் கொலையுண்டான்.

கண்ணகி : இந்த பொய்க் குற்றத்தை சுமத்திய வஞ்சகன் யார்? எந்த ஆதாரமும் இல்லாமல், எது உண்மை எது பொய் என்று சீர்தூக்கிப் பார்க்காமல் இதுபோன்ற மரண தண்டனைக்கு ஆணையிட்டவன் யார்?

மதுரை அரசன் : நானே ஆணையிட்டவன். அவனுடைய குற்றத்திற்கான ஆதாரம், அவனது கையிலேயே இருந்ததை எங்கள் படைவீரர்கள், பொற்கொல்லர் எல்லாரும் கண்ணாலே கண்டிருக்கிறார்கள். ராஜ நிந்தனைக்கு கடும் தண்டனையுண்டு. உன் கோபத்தால் மதியிழந்து பேசாதே. எச்சரிக்கை.

கண்ணகி : கண்ணிருந்தும் குருடாகிப் போன படைவீரர்களை நம்பிக்கொண்டு இருக்கிற குருடர்களின் சக்ரவர்த்தியே. என் கணவனின் கையில் இருந்தது அவன் நிரபராதி என்பதற்கான அடையாளம்.

மதுரை அரசன் : இதற்கு என்ன சாட்சி?

கண்ணகி : இதோ இந்த சிலம்பு.

(தன் காலில் இருந்த இன்னொரு சிலம்பைக் கழற்றியபடி)

இதோ பார், என் கணவனின் கையில் இருந்த சிலம்பின் இணையான இன்னொரு சிலம்பு. என் காலில் இருப்பது, என் கணவன் நிரபராதி என்பதற்கான இன்னொரு அடையாளம்.

(கண்ணகியிடமிருந்து சிலம்பை வாங்கி சோதித்துப் பார்க்கிறான் அரசன்.)

மதுரை அரசன் : வேறு வேறு இடத்தில் செய்யப்பட்ட இரண்டு கால் சிலம்புகளில் இத்தனை ஒற்றுமை இருப்பது எப்படி சாத்தியம்?

கண்ணகி : (அந்த கால் சிலம்பைப் பிடுங்கி)

உன் மனைவியின் காற்சிலம்பில் எத்தகைய பரல்கள் நிரம்பி இருந்தன? சொல். அதில் எத்தகைய பரல்கள் இருந்தன?

மதுரை அரசன் : முழுக்க முழுக்க முத்துக்கள்.

கண்ணகி : என் சிலம்பில்...

(கால் சிலம்பை ஓங்கி உடைக்கிறாள்)

மதுரை அரசன் : ரத்தினங்கள்! ஏதோ குழப்பம் நேர்ந்து விட்டிருக்கிறது.

கண்ணகி : குழப்பம் விலகி இருக்கிறது.

மதுரை அரசன் : இங்கே பாரம்மா. எதிர்பாராத விதமாக சிற்சில சமயங்களில் இப்படி நேர்ந்து விடுகிறது. உனக்கு எவ்வளவு நஷ்ட ஈடு வேண்டுமோ கேள், இந்தக் கணத்திலேயே கொடுக்க ஏற்பாடு செய்கிறேன்.

கண்ணகி : நிரபராதிகளின் உயிரை விலை கொடுத்து வாங்கும் மன்னா. என் கணவனின் உயிர்க்கு சரியான விலை உன் நாசம். உன் அரண்மனை

யும் செல்வமும், அரசாங்கமும் சர்வ நாசமாக வேண்டும். உன் நாடெல்லாம் காடாகட்டும். வசிக்கும் மனிதர்கள் எல்லாம் மிருகங்களாகி ஒருவரையொருவர் கடித்துக் குதறித்தின்னட்டும். எல்லாம் மண்மேடாகட்டும். மண்ணாகப் போகட்டும்.

(அவசரமாக அரசன் வெளியேறுகிறான். சாப மிடும் நிலையில் கண்ணகி நிற்கிறாள்)

கல் உடைக்கும் ஆண்கள் : கண்ணகி, அமைதியாகு.

கல் உடைக்கும் பெண்கள் : கண்ணகி, அமைதியாகு. எங்களைப் பார்த்தாவது அமைதியாகு.

கல் உடைக்கும் ஆண் 1 : ஆனால் கண்ணகி அமைதி யடையவில்லை. அதற்குப் பின் நடந்தது உண்மையான சம்பவங்களோ அல்லது கட்டுக் கதைகளோ, கண்ணகியின் அழுகையைப் பார்த்து மனம் உருகியவர்களின் விருப்பமோ, நீங்களே யோசித்துப் பாருங்கள்.

கல் உடைக்கும் ஆண் 2 : அதற்கப்புறம் நடந்தது என்ன என்றால், தன் பெண்மைக்கு அடையாள மாய் இருந்த ஸ்தனங்களில் ஒன்றைத் திருகி எடுத்து மதுரையின் முகத்தில் வீசி எறிந்தாளாம் கண்ணகி.

கல் உடைக்கும் ஆண் 1 : அப்பொழுது மதுரையே பற்றி எரியத் தொடங்கியது. நெருப்பின் நாக்கு கள் நான்கு திசைகளிலும் வேகமாகப் பரவின. நெருப்பின் புகை விண்ணை முட்டியது. அக்கினிக்குண்டம் போலவும், யாக குண்டம் போலவும் மதுரை மாநகரமே தீப்பிடித்து எரிந்ததாம்.

கல் உடைக்கும் ஆண் 3 : இந்த கதை முழுசாக முடிய வேண்டுமென்றால்

(அஞ்சியவனாக பொற்கொல்லன் வருகிறான்)

கல் உடைக்கும் பெண்கள் : (அவனை அடிப்பதுபோல அபிநயித்துக் கொண்டே அவனை மேடையில் இருந்து விரட்டுகிறார்கள்)

கல் உடைக்கும் ஆண் 3 : கொடூரமான குணம் கொண்ட அந்த பொற்கொல்லனை யாரோ கொன்று போட்டு விட்டார்கள்.

கல் உடைக்கும் ஆண் 2 : பூமியில் எழுந்த இந்த சத்தம் மேல் உலகத்தைத் தாக்க மேகங்களை விலக்கி விட்டு தேவதைகள் கூர்ந்து பார்த்துவிட்டு தமக்குள்ளேயே ஒருவர்க்கொருவர் சொல்லிக் கொண்டார்களாம்.

கல் உடைக்கும் பெண் 1 : அன்று மலையத்துவசன் செய்த யாக குண்டத்தில் மூன்று ஸ்தனங்கள் கொண்ட மீனாட்சி பிறந்ததைப் போல இன்று இந்த பேரழிவு யாகத்தில் ஒரு ஸ்தனம் தாங்கிப் பிறந்தவள் யார்?

கல் உடைக்கும் ஆண் 1 : அதோ அங்கே யோகிகளின் வாழ்வுக்கும் பங்கமேற்பட்டு, ஆழ்ந்த தியானத்தில் இருந்த கவுந்தி அடிகள் இந்த இடம் நோக்கி வருகிறார்கள்.

(கவுந்தி அடிகள் வருகிறார்)

கல் உடைக்கும் பெண் 1 : இதோ, இங்கே தன் கணவனின் அறுபட்ட தலையை கையில் ஏந்திக் கொண்டு கண்ணகியும் இப்பக்கம் வருகிறாள்.

(கண்ணகி நடந்து வருகிறாள்)

கவுந்தி அடிகள் : மகளே கண்ணகி, இவ்வுலகத்தைத் துறந்து தியானத்தில் ஆழ்ந்திருக்கும் வேளையில் நடந்த விஷயங்கள் எல்லாம் எங்கள் ஆசிரமத்தை எட்டி எனக்கும் தெரிந்தது. இந்த உலகமே குற்றங்களுக்கும், மோசடிகளுக்கும், குழப்பங்களுக்கும் உறைவிடம் என்ற ஞானம் கிடைத்தது. இன்றிலிருந்து உண்ணா நோன்பை கடைபிடித்து உயிர்துறப்பேன். அடுத்த ஜென்மத்திலாவது ஆணாகப் பிறந்து கடும் தவம் செய்து உயர்நிலையை அடைய முயற்சி செய்வேன். உனக்கு நான் சொல்ல நினைக்கும் கடைசி ஆலோசனை இதுதான். அமைதியாகு. உன் கணவனின் சாவு காரணமற்ற ஒன்றல்ல. அதன் காரணங்கள் என்னென்ன என்பது என் கண்களுக்கு நன்றாகப் புலப்படுகின்றன. போன ஜென்மத்தில் அவன் ஒரு அப்பாவியான வணிகனை வஞ்சித்துக் கொன்றதாலேயே இந்த ஜென்மத்தில் இப்படி நேர்ந்தது. அவனுடைய அகால மரணத்திற்கு அவன் செய்த வினையே காரணம். தன்னுடைய மற்ற நல்வினைகளின் காரணமாக சொர்க்க பதவியை அடைந்திருக்கிறான். மனைவிக்குரிய கடமைகளை சற்றும் பிறழாது செய்த உன்னை, அக்கடமைகளே காப்பாற்ற வேண்டும். அமைதியாகு. உங்கள் எல்லோர்க்கும் என் வந்தனங்கள்.

(கவுந்தி அடிகள் மறைகிறார்)

கல் உடைக்கும் பெண் 1 : தங்கை கண்ணகியே! உன் கோபத்தைப் பொறுத்துக் கொள். உன் கணவனின் உடலுக்குச் செய்ய வேண்டிய இறுதிச் சடங்கை முடித்துக்கொண்டு கணவனற்ற வாழ்வை வாழக் கற்றுக்கொள்.

கண்ணகி : சகோதர சகோதரிகளே, உங்களுக்கு என் வந்தனங்கள். எங்கிருந்தோ வந்த எங்கள் மேல் அன்போடும், அக்கறையோடும் இருந்தீர்கள். உங்கள் அன்புக்கடனுக்கு பிரதிபலனாக எதையும் சக்திக் கணவனை இழந்து நின்றிற்கும் எனக்கு இல்லை அடுத்த ஜென்மம் என்பது உண்மையெனில், அப்போது உங்கள் நன்றிக் கடனை அடைப்பேன்.

கல் உடைக்கும் ஆண் 1 : சகோதரி, இப்போது எதற்கு அடுத்த ஜென்மத்தைப் பற்றிய பேச்சு? இந்த ஜென்மத்து வாழ்வைப் பற்றி யோசி.

கண்ணகி : யோசனை செய்து ஒரு தீர்மானத்துக்கும் வந்திருக்கிறேன். கடைசி முறையாக எனக்கு ஒரு உதவியைத் தயவு செய்து செய்யுங்கள்.

கல் உடைக்கும் ஆண் 1 : என்ன செய்ய வேண்டும் சகோதரி?

கண்ணகி : என் கணவனுக்காக ஒரு சிதை தயார் செய்யுங்கள். அதன்கூட நானும் எரிந்து விடுகிறேன்.

கல் உடைக்கும் பெண் 1 : அப்படியென்றால் உடன் கட்டை ஏறப்போகிறாயா?

கண்ணகி : எனக்கென்று இனி என்ன இருக்கிறது? எந்த தவறும் செய்யாமல் எல்லா விதமான துயரங்களையும் அனுபவித்த எனக்கு வேறு என்ன வழி இருக்கிறது?

கல் உடைக்கும் ஆண் 2 : சகோதரி, நீ இந்த நாட்டின் பழக்க வழக்கம் என்னும் வலையில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறாய். அது மட்டும்

அல்லாமல் நீயே அந்த வலையை மேலும் இழுத்து இழுத்துக் கட்டிக்கொள்கிறாய்.

கண்ணகி : இது பழக்க வழக்க வலை இல்லை. விதியின் வலை.

கல் உடைக்கும் ஆண் 2 : பழக்கவழக்கம் என்னும் வலையை எல்லா நாட்டுக்காரர்களுமே விதி என்றுதான் சொல்லிக் கொள்கிறார்கள். எங்கள் கூட்டத்தில் கணவன் இறந்த உடனேயே, அந்த பெண்ணுக்கு இன்னொரு திருமணம் செய்து வைப்பதுதான் பழக்கம்.

கண்ணகி : என் தீர்மானம் முடிவானது. என் தந்தை இறந்தபோது அந்தச் சிதையிலேயே விழுந்து உயிரை மாய்த்துக் கொண்ட என் தாயின் வழியையே நானும் பின்பற்றுகிறேன்.

கல் உடைக்கும் ஆண் 2 : இதனால் என்ன பயன் ?

கண்ணகி : கணவனோடேயே தன் உயிரையும் போக்கிக் கொள்பவர்கள் தெய்வங்களாக ஆவார்கள் என்று அவள் மிக உறுதியாக நம்பு கிறாள்.

கல் உடைக்கும் பெண் 1 : உன் சோகத்தைக் காணும் போது மனம் கலங்குகிறது. உன் சிறுபிள்ளைத் தனமான போலிப்பிடிவாதத்தைக் காணும்போது சிரிப்பு வருகிறது.

கண்ணகி : சீக்கிரம் சிதைக்கு ஏற்பாடு செய்யுங்கள். நான் கிளம்ப வேண்டும்.

(அம்மா, அம்மா என்று முனகியபடியே பாண்டிய ராஜன் வருகிறான்)

பாண்டியராஜன் : அக்கா, கடைசியா இன்னைக்கி மாட்டிக்கிட்டேன். சாட்டையாலேயே என்ன அடிஅடின்னு அடிச்சிட்டாங்க. 'என்மேல என்ன தப்பு? எனக்கு தேவையானது இன்னொருத்தவங்ககிட்ட இருக்கும்போது ஏன் எடுத்துக்கக் கூடாது'ன்னு கேட்டேன். ஐயோ' ரொம்ப பசிக்குது அக்கா. அக்கா, இன்னைக்கு நம்ம ரெண்டு பேருக்குமே நல்ல அதிர்ஷ்டம் இல்லை.

கல் உடைப்பவன் 2 : ஐயோ, அவன் உடம்பெல்லாம் வீங்கி இருக்கிறது.

பாண்டியராஜன் : பசி, பசி. அக்கா நீ எங்கே கௌம்பிட்ட ?

கண்ணகி : திரும்பி வராத இடத்துக்கு.

பாண்டியராஜன் : அப்படியென்றால் நீ எனக்குத் தந்த வாக்குறுதி ? ஐயோ, வலிக்குதே.

(கண்ணகி பாண்டியராஜனைத் தழுவிக் கொள்கிறாள்)

கல் உடைக்கும் ஆண் 1 : இந்த அனாதைச் சிறுவன், வலியும் வேதனையுமான கண்ணகியின் எண்ணத்தை நிறுத்திவிட்டானா ?

(கண்ணகி கணவனின் உடலின் பக்கம் ஒரு முறையும் பாண்டியராஜனின் பக்கம் ஒருமுறையும் பார்க்கிறாள்)

கல் உடைக்கும் ஆண் 2 : இல்லை அவள் மனம் இன்னும் ஊசலாட்டத்தில் இருக்கிறது. இவளைப் போல தொல்லைகளிலும், துயரங்களிலும் அகப்பட்டுத்

தவிப்பவர்களுக்குச் சாவிற்கான வழியும், சொர்க்கத்திற்கான வழியும் மனசில் புலப்படுவது சகஜம். இவளுடைய தாய் தன் கணவனோடேயே இறந்து தெய்வங்களுள் ஒன்றானாளாம். நான் சொல்கிறேன், இறந்த பின்பு தெய்வம் ஆவதைவிட, உயிருடன் இருந்து சாதித்துக்கொள்வது என்பதே கஷ்டமான வேலை. கண்ணகியின் கோபம் மதுரையை என்ன செய்ததோ தெரியவில்லை. ஆனால் எங்கெங்கும் ஒரு பிழையும் செய்யாதவர்கள் இப்படித்தான் கொலையாகி விடுகிறார்கள். அனாதைச் சிறுவர்களும் எஞ்சி விடுகிறார்கள்.

கல் உடைக்கும் ஆண் 1 : இன்றைக்கு இல்லாவிட்டாலும் என்றைக்காவது ஒருநாள் அரசனாவேன் என்று கனவு காண்கிறான் இந்த அனாதைச் சிறுவன். இந்த அனாதைச் சிறுவனுக்குத் தாயாகி கண்ணகி வாழ்வைத் தொடர்வாளோ? அல்லது செத்து சொர்க்கத்திற்குச் செல்வாளோ? பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். நீங்கள் அவளிடம் என்ன சொல்ல விரும்புகிறீர்கள், ஒருவேளை அவளிடத்தில் நீங்கள் இருந்தால் என்ன செய்வீர்கள்? சொல்லுங்கள்...... **என்ன செய்வீர்கள்?**

(பாட்டு)

"உன் வேட்கைகள் எல்லாம் ஈடேறட்டும்
உன்காலடி மண்ணும் பொன்னாகட்டும்
விதியென்னும் குருடியின் கண் திறக்கட்டும்
திறந்தஅக் கண்களில் கருணை பொங்கட்டும்
மேகங்கள் கலைந்து தெளிவாகட்டும்
...யென்னும் இருள்குலைய ஒளியேறட்டும்"

89984
15-7-98

குறிப்புகள்

"எல்லா நூல்களின் இறுதி அமைப்புகளும் மறைந்த மதிப்பீடுகளைப் பாதுகாக்கின்றன. அதன் படிமங்கள், சூழல்கள், பாத்திரங்களை மீண்டும் கேள்விக்குட்படுத்தும் தேடல் முயற்சிகள் மட்டுமே புதிய மதிப்பீடுகளை உருவாக்க முடியும்" என்று உறுதியாக நம்பும் எச்.எஸ். சிவப்பிரகாஷ் கன்னட உலகின் முக்கிய நாடக ஆசிரியர்களுள் ஒருவர். 'மகாசைத்ர' 'சுல்தான் திப்பு', 'மண்டேஸ்வாமி கதா ப்ரஸங்க', 'மாதாரி மாதய்யா', 'மாதவி' ஆகியவை இவரது பிற முக்கிய நாடக முயற்சிகள். சிலப்பதிகாரத்தின் உட்கதை ஒன்றைக் கருவாகக் கொண்டு கன்னடத்தில் எழுதிப்பட்டுள்ள 'மதுரைக் காண்டம்' சமீபத்தில் அரங்கேறி வெற்றியடைந்தது

தாகும்.

Library IIAS, Shimla
T 891.481 42 Sh 69 M
00089984

காவ்யா

காவ்யா